விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை (27.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## கூட்டமைப்பு + ஈபிடிபி செற்றப்

# ஐ.தே.கட்சி ஆதரவு

# முதல்வரானார் ஆனோல்ட்



(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கூட்டமைப்புக்கு ஆதரவினை கொடுக்க யாழ். மாநகர சபையின் ஆட்சியை கைப்பற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. யாழ். மாநகரசபை முதல்வராக இமானுவல் ஆனோல்ட்டும் பிரதி முதல்வராக துரைராசா ஈசனும் தெரிவாகினர். (23ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரின் உழவு இயந்திரம் மோதியதில்

### முன்னாள் போராளி பலி



(யாழ்ப்பாணம்)

கடற்படையினரின் உழவு இயந்திரத்தில் மோதி வீதியில் தூக்கி வீசப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் பின்னால் வந்த கார் மோதி சம்பவ இடத்தில் பரிதாபமாக பலியாகியுள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரத்தை சேர்ந்த மூன்று பிள்ளை 23☛

## விடுதலைப் புலிகளின் வோக்கி கருவி நந்திக்கடலில் மீட்பு

(முல்லைத்தீவு)

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய வோக்கி கருவி ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நந்திக்கடல் பகுதியில் வயோதிபர் ஒருவர் தனது சொந்த காணியை துப்புரவு செய்யும் போதே 23☛

## வீதியில் போடப்பட்டிருந்த தென்னை ஓலை சறுக்கி விபத்துக்குள்ளானதில்

### குடும்பப்பெண் ஒருவர் உயிரிழப்பு ஆலயத்துக்குச் சென்றபோது பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் போடப்பட்டிருந்த தென்னை ஓலை சறுக்கி விபத்துக்குள்ளான குடும்ப பெண் ஒருவர் மூன்று மணி நேரத்தின் பின் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான விஜயானந்தன் சசிகலா (வயது 53) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். மட்டுவில் பன்றித்தலைச்சி அம் 24☛

## யாழ்.போதனாவில் குழந்தை கடத்தல்

### சி.ஐ.டிக்கு நீதிமன்று அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை கடத்தப்பட்ட குற்றச்சாட்டு வழக்கில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளரை 23☛

### கிளிநொச்சி பரந்தன் வீதியில்

## பேருந்து விபத்தில் இளைஞன் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பரந்தன் வீதியில், கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 23☛

### மன்னாரில் எலும்புத் துண்டுகள் மீட்பு

## மனித புதைகுழியா என தீவிர விசாரணை ஆரம்பம்



(மன்னார்)

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் அகழப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 24☛

## கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒற்றுமையுடன் பயணிப்போம்

### யாழ்.மாநகர முதல்வர் ஆனோல்ட்



(யாழ்ப்பாணம்)

கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒற்றுமையுடன் பயணிப்போம் என யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபைக்கான முதல்வர் மற்றும் பிரதி முதல்வரை தெரிவு செய்வதற்குரிய முதலாவது அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி 23☛

### கடலில் மிதந்து வந்த போத்தலை

## மதுபானம் என நினைத்து அருந்திய மீனவர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த நஞ்சு திரவத்தை மதுபானம் என் நினைத்து அருந்திய தென்பகுதி மீனவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். நீர்கொழும்பை சேர்ந்த வீரசிறிகே அன்ரனி பிலிப் குமார் நிமால் ஸ்ரீபெர் 23☛

## கட்சி பேதமின்றி மக்களுக்காக கடமையாற்றுவது அனைத்து அரசியல்வாதிகளினதும் கடமையாகும்



### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(பொலநறுவை)

கட்சி ரீதியாக பிரிந்து தேர்தலில் போட்டியிட்டபோதும் வெற்றியின் பின்னர் மக்கள் சேவையை நிறைவேற்றுகின்ற போது அரசியல் கட்சி பேதமின்றி செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு 24☛



### ஈ.பி.டி.பியின் பகிரங்க ஆதரவுடன்

## சாவகச்சேரி நகர சபையின் ஆட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமானது

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி நகர சபையில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் பகிரங்க ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் முதல் பெண் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட இராமநாதன் சிவ 23☛

### பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

## எதிர்வரும் 2ஆம் திகதி ஆராயப்படும் என கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எதிர்வரும் 2 ஆம் திகதி கூடி ஆராயப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பொதுச்செயலாளர், மாவை சேனாதிராசா இதனைத் தெரிவித்துள்ளார். பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஊழல் அற்ற சபையாக இயங்க அனைத்து முயற்சிகளும் செய்வோம்

## யாழ். நகரசபை உறுப்பினர் மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ் மாநகர சபையை ஊழல் அற்ற சபையாக இயங்கச்செய்வதற்கு எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் யாழ் மாநகர சபை உறுப்பினருமாகிய விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபைக்கான முதல்வர் மற்றும் பிரதி முதல்வரை தெரிவு செய்வதற்குரிய முதலாவது அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாநகர சபை முதல்வர் பதவிக்குரிய வேட்பாளர் என்ற வகையில் குறித்த அமர்வின் பின்னர், அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாநகர சபை முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ள இ.ஆனோல்ட்டுக்கு எமது கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், எமது கட்சி சில வேலைத்திட்டங்களை ஏற்கெனவே தெரிவித்திருந்தது.

அதை முன்னெடுத்து செல்வதற்கான பிரேரணைகளை எதிர்வரும் காலங்களில் சபையில் பிரேரிப்போம். அதன் அடிப்படையில் மாநகர சபை ஏற்றுக்கொண்டால் அதை நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

நாம் முழுமையாக சபையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதுடன் யாழ் மாநகரத்தை மாற்றியமைக்கும், மேம்படுத்தும் செயற்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி சபையை கொண்டு செல்ல எமது கட்சி தயாராக உள்ளது.

எமது தூயநகரம் வேலைத்திட்டம் முன்னெடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை முன்னெடுப்போம். மாநகரசபை முதல்வரின் அனுசரணையுடன் அதை செயற்படுத்த முடியும். எமது கொள்கையின் அடிப்படையில் ஊழல் அற்ற சபையாக தொடர்ந்து இயங்குவதற்கு எம்மாலான அனைத்து முயற்சிகளையும் செய்வோம்.

எமது நகரை சுத்தப்படுத்தும் பணியை ஏற்கெனவே எமது உறுப்பினர்கள் தொடங்கி விட்டார்கள். அது தொடர்சியாக முன்னெடுக்கப்படும். எமது செயற்திட்டங்களுக்கு சபையின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கிறோம். 2020 ஆம் ஆண்டுக்குள் யாழ் மாநகரை மாற்றியமைப்பதற்குரிய திட்டங்கள் முன்மொழிவோம் அதை சபை ஒத்துழைத்தால் விரைவாக மாநகரை முன்னேற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# 969 மாணவர்களின் க.பொ.த சாதாரண தர பெறுபேறுகள் நிறுத்தம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை 28 ஆம் திகதி வெளியிடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக 06 இலட்சத்து 88 ஆயிரத்து 573 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இந்நிலையில் இம்மாணவர்களில் 969 மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட மாட்டாது எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# மணவாளக்கோல விழா

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் மணவாளக் கோல உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூசை, வசந்தமண்டப பூசை, திருவூஞ்சல் என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வருவார். (ம)

# சேதமடைந்த நாணயத்தாள்கள் மார்ச் 31 வரையே செல்லுபடியாகும்

## மத்திய வங்கி மீண்டும் அறிவிப்பு

சிதைக்கப்பட்ட மற்றும் கிழிந்த நாணயத் தாள்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் மாற்றிக் கொள்ளுமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அருகில் உள்ள வங்கிக் கிளைகளில் இவ்வாறான நாணயத்தாள்களை மாற்றிக் கொள்ள முடியும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

சிதைவடைந்த மற்றும் கிழிந்த நாணயத்தாள்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

நாணயத்தாள்களை வேண்டுமென்றே சேதப்படுத்தல் அல்லது அதில் எழுதுதல் 1949ஆம் ஆண்டு இலக்கம் 58 நிதி சட்டத்துக்கு அமைவாக தண்டப்பணம் அல்லது சிறைத்தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும் என்று இலங்கை மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது. (ம)

# இரட்டை வேடம் போடும் சு.க பேராசிரியர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதமருக்கு எதிராக பாராளுமன்றில் வாக்களித்துவிட்டு உள்ளூராட்சிமன்றங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்க முடியாது. ஆகவே பிரதமருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கும் அதே வேளை உள்ளூராட்சிமன்றங்களில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து ஆட்சிமைக்க முன்வர வேண்டும் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பத்தரமுல்லையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் நான்காம் திகதி பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினமே அதன்மீதான வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். அதன் வெளிப்பாட்டை கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் போது காண்பித்துள்ளனர்.

மேலும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியே கொண்டு வந்திருக்க வேண்டும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகிக்கும் அரசாங்கத்தில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க முடியாதென சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களே அடிக்கடி தெரிவித்துள்ளனர். சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அடிக்கடி அக்கருத்தை தெரிவித்து வந்தனர்.

எனினும் அவ்வாறு அந்த உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தை தற்போது நடைமுறைப்படுத்தும் காலம் வந்துள்ளது. எனவே அதனை உறுதிப்படுத்துவதற்கு அவர்கள் தயாரான நிலையில் உள்ளார்களா என்ற சந்தேகம் உள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 44 பேரும் பொதுவான தீர்வு ஒன்றுக்கு வர வேண்டும். அப்போதுதான் நடைமுறைச்சாத்தியமான முடிவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

# இனவாதம் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க விசேட பிரிவு

(கொழும்பு)

பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி இனவாத கருத்துக்களை பரப்பும் இளைஞர்கள் உள்ளிட்ட நபர்கள் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வு பிரிவின் விசேட பிரிவொன்றினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமூக வலைத்தளங்களுடாக இவ்வாறான இனவாத கருத்துக்களை பரப்புபவர்கள் யாராக இருப்பினும் உடனடியாக கைது செய்து கடும் சட்டநடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரின் அனைத்து பிரிவுகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும்எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். (ம)

# கோத்தாவின் வழக்கு பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேருக்கெதிரான வழக்கை எதிர்வரும் ஜூலை 9ம் திகதி வரை பிற்போடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் கொழும்பு மேலதிக நீதவான் சானிமா விஜேபண்டார இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்திற்கு சொந்தமான மிதக்கும் ஆயுதக் கப்பல் ஒன்றை நடத்திச்செல்ல அனுமதி வழங்கியதன் மூலம் அரசுக்கு ஆயிரத்து 140 கோடி நஷ்டம் ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## சின்னவன் Poultry Center

இடம் : மானிப்பாய் ( மானிப்பாய் Ladies Collegeக்கு அருகாமையில்) தொ.பே: 077 408 1155

புறொயிலர் குஞ்சுகள்

- Our Lady Breed - 135/= (ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும்)
- Nawgala Breed - 130/= (ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்)

(35 நாளில் நிறை எடுக்கக்கூடியது)

Layer குஞ்சுகள்

- Dombawela Red - 140/=
- Dombawela White- 145/=

(4 மாதத்தில் முட்டையிடக் கூடியது)

- Prima Red - 120/=
- Prima White- 125/=

(3390)



## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.T.ஹரிகரன்
அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி**
**துரைராஜா**
**சண்முகேஸ்வரி**
அவர்களின் இறைபதம்
அடைந்த செய்தி கேட்டு
நாமும் துயரில் பங்கு
கொள்வதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*
ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(A-1399)



## மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

பின்வரும் நீதிமன்றத்தில் சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01. மாவட்ட / நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை

எனவே சிற்றுண்டிச்சாலை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றக் கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபாய் 100/= ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபாய் 5,000/= ஐயும் செலுத்தி 18.04.2018 புதன் கிழமை பிற்பகல் 2 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 18.04.2018 பிற்பகல் 3 மணி வரை ஆகும்.

மா.இளஞ்செழியன்
தவிசாளர்/ மேல்நீதிமன்ற நீதிபதி,
மேல்நீதிமன்ற கேள்விச்சபை,
மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(2001)



## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகர் அல்லது யாழ்.நகரை அண்மித்த பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு:**

**071 040 4978**

(3393)

# 10,000 கையெழுத்துக்கள் அடங்கிய கருணை மனு ஜனாதிபதிக்கு



(யாழ்ப்பாணம்)

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக் கோரி உலக தமிழர் மாணவர் ஒன்றியத்தால் யாழ்.மாவட்டத்தில் பெறப்பட்ட பத்தாயிரம் கையெழுத்துக்கள் அடங்கிய கருணை மனு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைப்பதற்காக யாழ். மாவட்ட அரச அதிபரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரில், கடந்த 2007 ஆம்ஆண்டு இடம்பெற்ற வன்முறையொன்றில் ஈடுபட்டதாக சி.ஆனந்த சுதாகரன் என்பவர் கைது செய்யப்பட்டு குற்றவாளியெனத் தீர்ப்பளித்து ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி ஆனந்த சுதாகரனின் மனைவி யோகராணி தனது கணவனின் ஆயுள் தண்டனையை அறிந்து அதிர்ச்சி நோய்க்கு ஆளாகி மரணமடைந்தார். அதனைத் தொடர்ந்து அவரது இரு பிள்ளைகளும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

அண்மையில் தாங்கள் பொது இடங்களில் மக்களை சந்திக்கும் போது சிறுவர்கள் மீது காட்டும் அக்கறை மற்றும் இரக்க செயற்பாடுகள் முழு உலகத்திற்கும் நெகிழ்ச்சியான மனதை படம்பிடித்துக் காட்டியுள்ளது.

எனவே சுதாகரனின் பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு எதிர்வரும் வெசாக் தினத்திலன்று ஆனந்த சுதாகரனுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என மேற்குறித்த கருணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

# ரணில் மீதான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு சு.கவின் ஆதரவு கிடைப்பதில் உறுதியற்ற நிலை

## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு கிடைப்பது தொடர்பில் உறுதியற்ற நிலை காணப்படுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் அண்மையில் வெளியிட்ட கருத்து காரணமாக அந்த கட்சியின் ஆதரவு கிடைப்பதில் உறுதியற்ற நிலைமை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஜீ.எல்.பீரிஸ் இதனை தெரிவித்தார்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மட்டுமல்லாது நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்க விரும்பவில்லை.

இந்த அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கருத்துக்களை செயற்பாட்டு ரீதியாக காண்பிக்க ஏப்ரல் 4ஆம் திகதி தயாராக வேண்டும்.

அப்படி அவர்கள் தயாராகவில்லை எனில் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை விரும்பவில்லை எனக் கூற முடியாது எனவும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். (இ-7)

## ரணிலுக்கு ரத்ன தேரர் எச்சரிக்கை

# புதிய தேசிய தலைவரொருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்



(கொழும்பு)

புதிய தேசிய தலைவரொருவரை நியமிப்பதற்கான முயற்சிக்கு தான் பின்நிற்கப் போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்கேற்று கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எந்தவொரு தேசிய சொத்துக்களையும் விற்பனை செய்வதில்லை. இராணுவ வீரர்களை சிறைக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் கைவிடப்படும் எனவும் ஆகிய உறுதிமொழிகள் வழங்கப்படுமாயின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

ஆனால் பிரதமரின் பயணம் இதே பாதையில் தொடருமாயின், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் நானும் இணைந்து கொள்ள நேரிடும்.

அத்துடன், புதிய தேசிய தலைவரொருவரை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கைக் கடற்படையினரால் இராமேஸ்வரம் மீனவர்கள் துப்பாக்கி முனையில் சிறைபிடிப்பு

## தமிழகத்தில் கொந்தளிப்பு

(சென்னை)

தமிழகம் - இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் 10 பேர் இலங்கை கடற்படையினரால் துப்பாக்கி முனையில் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் இராமேஸ்வரத்தில் மீனவர்களிடையே கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு மீன்பிடிக்க கடலுக்கு சென்ற நிலையில், அங்கு வந்த இலங்கை கடற்படையினர், மீனவர்கள் 10 பேரை துப்பாக்கி முனையில் சிறைபிடித்துள்ளனர்.

அத்துடன், மீனவர்களின் விசைபடகு இரண்டினையும் கடற்படையினர் சேதப்படுத்தியுள்ளனர். மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள விவகாரம் இராமேஸ்வரம் மீனவர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பிரதமர் மீதான பிரேரணை குறித்து முடிவெடுக்க இந்தவாரம் கூடுகிறது சு.க.வின் மத்திய குழு

(கொழும்பு)

பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஆராய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இந்த வாரம் இடம்பெறும் எனவும் ஜனாதிபதியுடன் ஆழமாக கலந்துரையாடி பிரதமர் விவகாரத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

பிரேரணையில் கைச்சாத்திடுவது குறித்து தனித்து தீர்மானம் எடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்துள்ள நிலையில் எதிர்வரும் மாதம் 4 ஆம் திகதி குறித்த பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்படவுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்னவென வினவிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு எதிராக தொடர்ச்சியாக நெருக்கடி நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான காரணமாகும்.

அவர்களின் கொள்கைகள், செயற்பாடுகள் என்பவற்றில் பாரிய நெருக்கடி நிலைமைகள் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களே மீண்டும் தமது நிலைப்பாட்டினை மாற்றியமைத்து பிரதமருக்கு எதிராக செயற்படவுள்ளதாகவும் ஊடகங்களில் அறிய முடிகின்றது.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக நாம் இன்னமும் எந்தவித இறுதித் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இந்த வார நடுப்பகுதியில் கூடும். ஜனாதிபதி தலைமையில் கூடும் எமது கூட்டத்தில் பிரதானமாக பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஆராயப்படும்.

இதில் மத்திய குழுவாக என்ன தீர்மானம் எடுக்கப்படுகின்றதோ அதனையே நாம் அனைவரும் முன்னெடுப்போம். பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து கட்சிக்குள் இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. எனவே இறுதி நிலைப்பாடு குறித்து ஆழமாக ஆராய வேண்டிய தேவையும் உள்ளது.

இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக அல்லாது எவரும் தனிப்பட்ட தீர்மானங்களை முன்னெடுக்க முடியாது. எனினும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிலர் கைச்சாத்திட்டுள்ளனர். இது கட்சியின் ஒழுக்கக்கோவைக்கு முரணானது.

எனவே இது குறித்தும் மத்திய குழுக் கூட்டத்தில் ஆராய வேண்டும். எவ்வாறு இருப்பினும் பிரதமரை ஆதரிப்பதா? இல்லையா? என இன்னும் இஸ்திரமான நிலைப்பாட்டினை நாம் எட்டவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுதத்தின் அலுவலகத்திற்கு சீல்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக செயலாளர் பதவியிலிருந்து விலகிய சுதத் சந்திரசேகர, கடமையாற்றி வந்த ஐக்கிய தேசிய கட்சியின் சிறிகொத்தா தலைமையகத்திலுள்ள அலுவலகத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலக அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய இவ் அலுவலகம் சீல் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், குறித்த அலுவலகத்தில் பணியாற்றி வந்தவர்களுக்கு தொடர்ந்து தாங்களது கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமின்றி போனதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் தொடர்பாடல் பிரிவின் தலைவராகவும் சுதத் சந்திரசேகர பணியாற்றி வந்ததுடன், அப்பதவியிலிருந்தும் அவர் விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முக்கிய தருணங்களில் இங்கிலாந்துக்கு வேட்டு வைத்தார் நீல் வோக்னர்

# மழையின் கடும் பிடிக்கு மத்தியில் ஆக்லாந்தில் வாகைசூடியது நியூசி.



ஆக்லாந்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் (பகலிரவு டெஸ்ட்) நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 49 ஓட்டங்களால் வாகைசூடியது.

பெரும்பகுதி ஆட்டத்தை மழை காவு கொண்டமையால் எங்கே நியூசிலாந்தின் வெற்றி பறிபோகுமா? என்று இரசிகர்கள் பரிதவிக்க, நியூசிலாந்து தனக்கேயுரிய வெற்றியை இறுதிநாளில் அடைந்தது.

நியூசிலாந்தின் இவ் வெற்றிக்கு வேகப்பந்து வீச்சாளர் நீல் வோக்னரின் பந்துவீச்சும் காரணம் எனலாம்.

நேற்றைய இறுதி நாளின் முக்கிய தருணங்களில் முக்கிய வீரர்களை (ஸ்ரோக்ஸ், வோக்ஸ்) ஆட்டமிழக்கச் செய்து சமனிலையை நோக்கி துடுப்பாட்டத்தை நகர்த்திய இங்கிலாந்தின் கனவைச் சிதைத்தார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் (பகலிரவு) கடந்த 22ஆம் திகதி ஆக்லாந்தில் ஆரம்பமானது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 58, நியூசிலாந்து 427/8 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தன.

நேற்று முன்தினம் நான்காம் நாள் நிறைவில், 2ஆவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மலான் (19) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இங்கிலாந்து அணியின் மலான் (23), பேர்ஸ்டோவ் (26), மொயீன் அலி (28) பெரிய அளவில் சோபிக்கவில்லை. பொறுப்பாக ஆடிய பென் ஸ்ரோக்ஸ் (66), கிறிஸ் வோக்ஸ் (52) அரைச்சதம் கடந்து ஆறுதல் கொடுத்தனர். டாட் ஆஸ்லே 'சுழலில்' ஓவர்டன் (3), ஜேம்ஸ் அண்டர்சன் (1) சிக்கினர்.

இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 320 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் போல்ட், வோக்னர், ஆஸ்லே தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய நியூசிலாந்தின் போல்ட் ஆட்டநாயகன் விருதை கைப்பற்றினார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர்வரும் 30ஆம் திகதி கிறைஸ்ட்சேர்ச் நகரில் தொடங்குகிறது.

### பத்தாவது வெற்றி

ஆக்லாந்து டெஸ்டில் அசத்திய நியூசிலாந்து அணி, இங்கிலாந்துக்கு எதிராக 10ஆவது வெற்றியை பதிவு செய்தது. இதுவரை இவ்விரு அணிகளும் 102 டெஸ்டில் மோதியுள்ளன. இதில் இங்கிலாந்து 48, நியூசிலாந்து 10ல் வெற்றி பெற்றுள்ளன. 44 போட்டிகள் சமனிலையானது.

# ஸ்மித், வோர்னருக்கு வாழ்நாள் தடையா?

## பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில்

பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கிய அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித், துணைத் தலைவர் வோர்னருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் எனத் தெரிகிறது.

தென்னாபிரிக்க - அவுஸ்திரேலிய அணிகள் மோதிய மூன்றாவது டெஸ்ட், கேப்டவுனில் நடந்தது. இதன் மூன்றாவது நாள் ஆட்டத்தில், தென்னாபிரிக்க அணி வலுவான முன்னிலையுடன் ஆதிக்கம் செலுத்தியது. இதனால், உணவு இடைவேளையின்போது அவுஸ்திரேலிய அணியினர் ஆலோசித்தனர். முடிவில், பந்தை சேதப்படுத்தி, 'சுவிங்' செய்து, விக்கெட்டுகளை வீழ்த்தலாம் என, வோர்னர் 'ஐடியா' கொடுத்தாராம். இதை அணித் தலைவர் ஸ்மித் ஏற்றுக் கொள்ள திட்டத்தை செயல்படுத்த அணியின் இளம் வீரரான பான்கிராப்ட்டை தேர்வு செய்தனர்.

பின் தாங்கள் செய்த தவறினை பத்திரிகையாளர் சந்திப்பில் ஒத்துக்கொள்ள, இன்று ஒட்டுமொத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட்டும் அசிங்கப்பட்டு நிற்கிறது. இவ்விடயத்தில் ஸ்மித்துக்கு 100 சதவீத அபராதம், ஒரு டெஸ்ட் தடை மட்டும் விதித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒதுங்கிக் கொண்டது.

### ஐ.சி.சி., பாரபட்சம்

ஊரறிய, உலகறிய பந்தை சேதப்படுத்திய பான்கிராப்ட்,



அவுஸ்திரேலிய பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியான ஸ்மித்

75 சதவீத அபராதம் மட்டும் கட்டினால் போதும் என ஐ.சி.சி., கூறிவிட்டது. ஐ.சி.சியின் இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இதனிடையே, அவுஸ்திரேலிய பிரதமர் டர்ன்புல் அதிருப்தி தெரிவிக்க வேறு வழியில்லாமல் ஸ்மித், வோர்னரை பதவி விலக்கினர்.

### சி.ஏ., விசாரணை

இதனிடையே கிரிக்கெட் அவுஸ்திரேலியா (சி.ஏ.,) சார்பில், இரு நபர்கள் அடங்கிய குழு கேப்டவுன் விரைந்தது. இங்கு முதலில் பான்கிராப்ட்டிடம் விசாரணையை ஆரம்பித்தனர். அடுத்து சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களிடம் விசாரிக்க உள்ளனர்.

முடிவில், அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு அவமானத்தை கொண்டு வந்த, உலகின் 'நம்பர்-1' டெஸ்ட் வீரரான ஸ்மித், வோர்னர் என இருவருக்கும் வாழ்நாள் தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இதாங்க வேலையே

பான்கிராப்ட் பந்தை சுரண்டியது முதன்முறையல்ல. கடந்த ஜனவரியில், இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் போது, பொக்கெட்டில் சீனியை அள்ளி வைத்துக் கொண்டு களமிறங்கிய வீடியோ தற்போது வெளியானது. அதாவது, சீனி உள்ள பொக்கெட் வெளிப்புறம் பந்தை வைத்து தேய்க்கும் போது, அந்த சொர சொரப்பு காரணமாக, பந்தின தன்மையை மாற்றியுள்ளார் எனத் தெரிகிறது.

### வோர்னரும் இப்படித்தான்

வோர்னர் கைவிரல்களில் ஸ்ரோப் சுற்றியிருப்பார். இதை வைத்து பந்தை தேய்த்து அதன் தன்மையை மாற்றுவாராம். இதை சமீபத்திய ஆஷஸ் தொடருக்குப் பின் நடந்த பார்ட்டியில், இங்கிலாந்து வீரர்களிடம் போதையில் உளறியுள்ளார். இதனால் வரும் 4ஆவது டெஸ்டில் இவர் சேர்க்கப்படமாட்டார் என கூறப்படுகிறது.

### பயிற்சியாளருக்கு சிக்கல்

பந்தை சேதப்படுத்தும் செயல் அவுஸ்திரேலிய பயிற்சியாளர் டரன் லேமனுக்கும் தெரிந்துதான் நடந்தது. பான்கிராப்ட் செயல், ஸ்கிரீனில் ஒளிபரப்பானதும் 'வாக்கி டாக்கி' உதவியால், மாற்று வீரர் ஹேண்ட்ஸ்கோம்ப்பை அழைத்து 'அட்வைஸ்' செய்தார்.

உடனே, களத்தில் விரைந்த அவர், பான்கிராப்ட்டிடம் சென்று, 'அந்த உப்புத்தாளை மறைந்து வை,' என்றார். இதன் பிறகுதான், அதை உள்ளாடைக்குள் மறைத்தார். இதுவும் பதிவாகிவிட்டது. இதனால் பயிற்சியாளர் பதவியும் ஊசலாடுகிறது.

# இஸ்லாமபாத் யுனைடெட் சம்பியன்




பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் பெஷாவர் ஷல்மி அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட இஸ்லாமாபாத் யுனைடெட் 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் நடத்தப்பட்டு வருகிறது.

இத் தொடரின் 3ஆவது சீசன் கடந்த சில வாரங்களாக நடைபெற்றது.

பாகிஸ்தான் கராச்சி மைதானத்தில் பலத்த பாதுகாப்பிற்கு இடையே நேற்று இறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் பெஷாவர் ஷல்மி - இஸ்லாமாபாத் யுனைடெட் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முந்தைய இரண்டு சீசனில் இரு அணிகளும் தனா ஒருமுறை சம்பியன் பட்டம் வென்றிருந்த நிலையில், இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வெல்லும் முனைப்பில் களம் இறங்கின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெஷாவர் ஷல்மி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி துடுப்பெடுத்தாட களமிறங்கிய பெஷாவர் ஷல்மி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 149 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இஸ்லாமாபாத் யுனைடெட் அணி, 16.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து (154) வெற்றியிலக்கை 3 விக்கெட்டுக்களால் அடைந்தது. இதன்மூலம் 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. 22 பந்துகளில் 52 ஓட்டங்கள் குவித்த ரோஞ்சி ஆட்டநாயகன் விருதுடன் தொடர் நாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.


## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு

# விண்ணப்பிக்குக

இருபாலை கற்பகாஸ் விளையாட்டுக் கழகம் தனது 5ஆவது வருட பூர்த்தியை கொண்டாடும் பொருட்டு எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை (Over Game) யாழ். மாவட்ட அணிகளை ஒன்றிணைத்து எதிர்வரும் 02.04.2018 - 08.04.2018 திகதிகளுக்குள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பப்படிவத்தினை ரூபாய் 1000 செலுத்தி கழக காரியாலயத்தில் 01.04.2018ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வெற்றி பெறும் 1ஆம், 2ஆம் அணிகளுக்கு 10000, 5000 ரூபாய் மற்றும் வெற்றி கேடயம் வழங்கப்படவுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 0779398719, 0702706469 எனும் இலக்கத்தை அணுகவும். (ம)

# நான் தவறு எதுவும் செய்யவில்லை

# இலங்கை மண்ணை எந்தவொரு நாடும் பயன்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை



## கோத்தபாய ராஜபக்ஷ தன்னிலை விளக்கம்

இந்திய அதிகாரிகள் எம்முடன் பேசுவதில்லை. அதுதான் பாரிய பிரச்சினையாக இருக்கிறது. எமது ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியினரை இராஜதந்திரிகள் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டது. அது வழமையாக இருந்தது. ஆனால் தற்போது இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கூட எம்மை சந்திப்பதற்கு தயங்குகிறார்.

இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இந்திய அதிகாரிகள் எம்மை சந்திப்பதில் இலங்கை அரசாங்கம் ஏன் கவலையடைகின்றது என்று எனக்குப் புரியவில்லை என்று முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எமது அரசாங்கம் இந்தியாவுக்கெதிராக இலங்கை மண்ணை எந்தவொரு நாடும் பயன்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை. இராஜதந்திரம் என்பது கலையாகும். அது கலந்துரையாடல், ஈடுபாடு மற்றும் பரஸ்பர நம்பிக்கையைப் பொறுத்தே அமையும். இலங்கையுடனான நட்பில் இந்தியா, சீனா என்ற விவகாரத்தை கைவிட்டு வெளியே வரவேண்டும் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ அறிவுரை வழங்கியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவின் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**கேள்வி:** இந்தியாவின் கரிசனை உங்களது அணுகுமுறையை மாற்றுவதற்கு தலைமை வகித்ததா?

**பதில்:** எங்களுக்கு இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கத்திடம் சிறந்த புரிந்துணர்வு இருந்தது. அது அரசபணி ரீதியாகவே இருந்தது. புலிகளைத் தோற்கடிப்பதில் இந்தியாவின் முழுமையான ஆதரவைப் பெற எம்மால் முடிந்தது. ஆனால் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்தின் அரச அதிகாரிகள் இலங்கையை அப்போது வித்தியாசமான வழியில் பார்த்தனர். அதாவது நிலைமையை உரியமுறையில் புரிந்துகொள்ளாமல் இவ்வாறு செயற்பட்டனர்.

விசேடமாக இலங்கைக்கு வந்த நீர்மூழ்கிக் கப்பலின் உண்மைநிலை தொடர்பில் தெரியாமல் இருந்தனர். இதில் இந்திய ஊடகங்கள் முக்கிய வகிபாகத்தை வகித்தன. எவ்வாறெனினும் இந்திய அரச அதிகாரிகள் இது தொடர்பில் எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாம். அதுமட்டுமன்றி இந்தியா, இலங்கைக்கெதிராக செயற்படுவதாக இலங்கையின் சில தேசப்பற்றாளர்களும் செயற்பட்டு வந்தனர். இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் புலிகளுக்கு இந்தியாவில் பயிற்சியளிக்க இந்திரா காந்தி ஆதரவளித்தார்.

அச் செயற்பாடு இலங்கையில் இந்திய எதிர்ப்பு உணர்வை உருவாக்கியது. இலங்கையின் உள்ளக விவகாரங்களில் இந்தியா அநாவசிய தலையீடுகளை மேற்கொள்வதாக இலங்கை மக்கள் உணர்ந்தனர். கடந்த அரசாங்க மாற்றத்திலும் இவ் விடயம் உணரப்பட்டது. இந்நிலைமை தொடர்பில் இந்திய அரசாங்கம் ஆழமாக பார்க்க வேண்டும். மாறாக இவ்வாறு செயற்படக் கூடாது.

**கேள்வி:** நீங்கள் இந்தியாவுடன் தொடர்பில் இருக்கின்றீர்களா?

**பதில்:** இல்லை. அவர்கள் எம்முடன் பேசுவதில்லை. அதுதான் இங்கு பிரச்சினையாக இருக்கிறது. எமது ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியினரை இராஜதந்திரிகள் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டது. அது வழமையாக இருந்தது. இராஜதந்திரிகள் மட்டுமன்றி இந்தியாவிலிருந்து வருகின்ற அனைவரும் அப்போது இலங்கையின் எதிர்க்கட்சித் தரப்பினரை சந்தித்தனர். ஆனால் தற்போது இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கூட எம்மை சந்திக்கத் தயங்குகிறார். இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இந்திய அதிகாரிகள் எம்மை சந்திப்பதில் இலங்கை அரசாங்கம் ஏன் கவலையடைகின்றது என்று எனக்குப் புரியவில்லை.

**கேள்வி:** யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் ஆகின்றன. சமாதானம் தற்போது கிடைத்திருக்கிறதா?

**பதில்:** 30 வருடங்களாக யுத்தம் நீடித்தது. யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையின் அபிவிருத்திகளே புலிகளைத் தோற்கடித்ததை விட மிகப் பெரிய வெற்றியாகக் காணப்பட்டன. ஆனால் அதனை சர்வதேச சமூகமும் சர்வதேச அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாம் பாரிய சாதனைகளை அடைந்தோம். உட்கட்டமைப்பு வசதிகள் மட்டுமன்றி அரசியல் சாதனைகளையும் படைத்தோம். மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டு வரை வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டிருக்கவில்லை.

நாங்கள் நீதியான, சுதந்திரமான தேர்தலை நடத்தினோம். நாம் வடமாகாண சபைத் தேர்தலில் தோற்கப் போகிறோம் என தெரிந்துகொண்டும் வடக்கு மக்கள் அவர்களுக்குத் தேவையானவர்களை தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தோம். 2013 ஆம் ஆண்டு முடிவில் அதிகளவான வீடுகளும் காணிகளும் விடுவிக்கப்பட்டன. பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வீதிகள், ரயில் தண்டவாளங்கள், மின்சாரத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. எம்மிடம் சரணடைந்த பயங்கரவாதிகளுக்கு நாம் புனர்வாழ்வளித்தோம். 30 வருட யுத்தத்துக்குப் பின்னர் ஒரே இரவில் சமாதானத்தை அடைய முடியாது. அந்தத் தத்துவங்களை முன்வைக்கும் மக்கள் தொடர்ந்து இருந்தனர். காயங்கள் ஆற்றப்படுவதாக நான் கூறவில்லை. காரணம் கடந்த 3 வருடங்களாக என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அரசியல் சுதந்திரம் குறித்துப் பேசுவதற்கு முன்னர் பொருளாதார சுதந்திரத்தை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே முக்கியமானது என நான் கருதுகின்றேன். ஆனால் அவர்கள் அதிகாரப் பகிர்வு குறித்து மட்டுமே பேசுகின்றனர். அது இரண்டாம் பட்சமாகும். மக்களுக்கு உணவு, வேலைவாய்ப்பு, அடிப்படைத் தேவைகள் என்பன பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் நமது அரசியல் ஆர்வத்தை இச் செயற்பாட்டுக்கு அப்பால் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர்.

**கேள்வி:** நீங்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் இவ் விடயங்களுக்காக முக்கியத்துவம் அளிப்பீர்கள்?

**பதில்:** ஆம். நாம் என்ன செய்துகொண்டிருந்தோமோ அதனையே தொடர்வோம். நாட்டின் அனைத்து மக்களையும் போன்று வடக்கு, கிழக்கு மக்களும் சமமானவர்கள் என்பதை உணரும் வகையில் சந்தர்ப்பங்களை பெறும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்.

**கேள்வி:** உங்கள் இரு சகோதரர்களைப் பற்றி கூற முடியுமா? பசில் ராஜபக்ஷ, மகிந்தவின் ஆலோசகராக செயற்பட்டார். நீங்கள் அவர்களுடன் அடிக்கடி பேசுவீர்களா?

**பதில்:** நாம் எப்போதுமே ஒரு அணியாகவே வேலை செய்கின்றோம்.

நாம் நாட்டைப் பற்றியே சிந்திக்கின்றோம். ஆனால் அடிக்கடி பேசக் கிடைப்பதில்லை. யுத்தத்தின் போது தொடர்ச்சியாகவே இணைப்பில் இருந்தோம். இவ் ஒற்றுமை எம்மிடம் ஆரம்பத்திலிருந்தே வந்தது. ஒற்றுமை எப்போதுமே பலமானது. அதைத்தான் எமது தந்தை எமக்கு கற்பித்தார். நாம் இனரீதியாகவும் மத ரீதியாகவும் பிரிந்தால் வெளிநாட்டு சக்திகள் எமது நாட்டில் அழுத்தம் பிரயோகிப்பார்கள். எனவே ஒற்றுமை பற்றியே நாம் எப்போதும் சிந்திக்க வேண்டும்.

**கேள்வி:** உங்கள் கரங்கள் கறைபடிந்துள்ளதாக பலர் கூறுகின்றனர். யுத்தத்தின் போது ஒரு பாதுகாப்புச் செயலாளராக இருந்து நீங்கள் புலிகளை தோற்கடித்த போது ஆயிரக்கணக்கான மக்களை கொன்றமை குறித்து குற்றஞ் சாட்டப்படுகிறது. இக் குற்றச்சாட்டுக்களுக்கு உங்கள் பதில் என்ன? அத்துடன் இவ் யுத்தம் உங்கள் தனிப்பட்ட வாழ்வை எவ்வாறு பாதித்தது? யுத்தத்தின்போது தூக்கமற்ற இரவுகளை சந்தித்தீர்களா?

**பதில்:** நான் தவறு எதுவும் செய்யவில்லை. சரியானதையே செய்தேன் என்று எனக்குத் தெரியும். எனது மனசாட்சி அதனைக் கூறுகிறது. சிவிலியன்கள் கொலை தொடர்பில் நீங்கள் கேட்கும் போது யுத்தம் என்பது இலகுவானதல்ல என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அது இலங்கையோ இந்தியாவோ பாகிஸ்தானோ ஏன் ஈராக்காகவோ கூட இருக்கலாம். யுத்தம் என்பது நல்ல விடயமல்ல. ஆனால் இலங்கையில் நான் யுத்தத்தை உருவாக்கவில்லை. மாறாக நான் யுத்தத்தை முடித்தேன். யுத்தம் இருப்பதை விட அதனை முடிப்பது மேன்மையானது. புலிகளில்லாமல் எமது நாடு ஒரு சிறந்த இடத்திலிருக்கிறது. இன்று இலங்கை ஜனாதிபதியால் எங்கும் போகலாம். இராணுவ வீரர்கள் மட்டுமன்றி பயங்கரவாதம் காரணமாக சாதாரண மக்களும் உயிரிழந்தனர். யார் நண்பர்கள், யார் எதிரிகள் என்பதை குண்டுகள் அடையாளம் காண்பதில்லை. யுத்தத்தின் போது நான் இரவில் நித்திரையடைந்திருக்கிறேன்.

**கேள்வி:** யுத்தத்தை முடிப்பதற்கு இந்தியா உதவியது. ஆனால் இலங்கை சீனாவுடன் நெருங்கி இந்தியாவை காட்டிக்கொடுத்ததாக உணர்வு வந்ததே?

**பதில்:** இந்தியாவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அதில் இலங்கை இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில் கரிசனையுடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். எமது அரசாங்கம் இந்தியாவுக்கெதிராக இலங்கை மண்ணை எந்தவொரு நாடும் பயன்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை. இராஜதந்திரம் என்பது கலையாகும். அது கலந்துரையாடல், ஈடுபாடு மற்றும் பரஸ்பர நம்பிக்கையைப் பொறுத்தே அமையும். இலங்கையுடனான நட்பில் இந்தியா, சீனா என்ற விவகாரத்தை கைவிட்டு வெளியே வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## இராசி பலன்

**மீனம்:** தடைப்பட்ட காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்:** தேசநலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தன்னம்பிக்கையோடு பணியாற்றுவீர்கள், கௌரவம், அந்தஸ்து உயரும், புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**கும்பம்:** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், மறைமுக போட்டிகள் மாறும், போசன சுகமுண்டு.

**கடகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு, ரோக பயமுண்டு.

**மகரம்:** எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், களஸ்திர நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, சுக், புத | | | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம்<br>காலை 6.25 மணிக்கு<br>கட-சந் | | ராகு, சந் |
| கேது | | | |
| சனி, செவ் | குரு | | |

**27.03.2018**

பங்குனி 13, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

ஏகாதசி பின்னிரவு 12.52 மணிவரை

பூசம் முற்பகல் 10.47 மணிவரை

சுபநேரம் 10.44-12.14 மணிவரை

இராகுகாலம் 3.14-4.44 மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

**தனுசு:** எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியத்தில் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி:** எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செல்வ நிலை உயரும் நாள், போசன சுகமுண்டு.





வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் உள்ள பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சர் விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன் உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)




நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ.பியந்த தலைமையில் அணிவகுப்பு மரியாதை நேற்று நடைபெற்றது. காங்கேசன்துறை பிராந்திய பொறுப்பதிகாரி உடுகமசூரிய அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். (படங்கள்:- மகாலிங்கம்)

## மரதன் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மேற்கு ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும் பாலர் பாடசாலையும் மற்றும் மகளிர் சங்கமும் இணைந்து நடத்தும் மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலைய முன்றலில் கே.ரி.கமலநாதன் தலைமையில் ஆரம்பமாகும். இப்போட்டியில் முதல் பரிசு துவிச்சக்கர வண்டியும் இரண்டாம் பரிசு காஸ் அடுப்பு, சிலிண்டரும் மூன்றாம் பரிசு CD பிளேயரும் வழங்கப்படுவதுடன் 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## பங்குனித்திங்கள் வழிபாட்டுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

பலாலி இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பங்குனித்திங்கள் பொங்கல் வழிபாடு நடத்த இராணுவத்தின் அனுமதி கிடைத்துள்ளமையால் அடியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பலாலி கண்ணார் வயல் இராஜராஜேஸ்வரி ஆலயமும் இந்துக்கோவில்களும் மற்றும் மீள் குடியேற்ற சபையும் அறிவித்துள்ளது. (இ)

## அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 2018 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 07.04.2018 சனிக்கிழமை அன்று முற்பகல் 10 மணிக்கு அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் தலைமையில் தம்பையா மண்டபத்தில் நடைபெறும். (இ-7)

## 54ஆவது குருபூசை

(யாழ்ப்பாணம்)

யோகர் சுவாமிகளின் 54 ஆவது குருபூசை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவிதேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில்யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சயனொளிபவன் முகுந்தன் சொற்பொழிவாற்றுவார். நற்சிந்தனைப்பாடல்களை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் பாடுவர். (இ)

## முகத்தை மூடிக் கட்டியவாறு

## வீட்டாரை கத்தி முனையில் அச்சுறுத்தி 12 பவுண் நகைகள், பணம் கொள்ளை

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட 06 ஆம் யூனிட் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் முகத்தை மூடிக்கட்டியவாறு உள் நுழைந்த 05 பேர் கொண்ட திருட்டுக் கும்பல் வீட்டாரை கத்தி முனையில் அச்சுறுத்தி வைத்து விட்டு சுவாமிப் படத்தின் பின்புறமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 12 பவுண் நிறையுடைய தங்க நகை, 50 ஆயிரம் ரூபா பணம் உட்பட சுமார் 07 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர்.விமல குணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12. 30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வீட்டுக்கு நேற்று அதிகாலை சென்ற திருடர்கள் பொலிஸார் வந்துள்ளதாக கதவினை திறக்குமபடி கூறியுள்ளனர்.

இதனையடுத்து, வீட்டு உரிமையாளர் கதவைத் திறந்த போது உள் நுழைந்த திருட்டுக் கும்பல் வீட்டில் இருந்தவர்களின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதுடன், வீட்டு மின்சாரத்தையும் துண்டித்து விட்டு சுவாமிப் பட அறையில் சுவாமிப் படங்களுக்குப் பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் மற்றும் பணம் உட்பட வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களையும் கொள்ளையிட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளரினால் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸார் விரைந்து சென்று தேடுதல் மேற்கொண்ட போதும் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை.

இந் நிலையில் பொலிஸார் தடயங்களைச் சேகரித்ததுடன், புலன் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

## ஊழியர் வைப்புக்களை சீர்படுத்தாவிட்டால் பாரிய தொழிற்சங்கப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபை வடமாகாண பிராந்திய சாலைகளில் உள்ள ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி வைப்புக்கள் இரு வாரங்களுக்குள் சீர்படுத்தப்படாவிட்டால் பாரிய தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து அவர்கள் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில்,

இலங்கை போக்குவரத்து சபை வடமாகாண பிராந்திய சாலைகளில் உள்ள ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி வைப்புக்கள் பல காலமாக சீர்படுத்தப்படாமல் இருப்பதை அறிய முடிகிறது.

இலங்கையில உள்ள அனைத்து அரச தனியார் நிறுவன ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி வைப்புக்களில் இருந்து மிகவும் பெறுமதியான சலுகைகளை பெறுகையில் எமது ஊழியர்கள் இச் சலுகை எதுவும் பெறமுடியாது துன்பப்படுகிறார்கள்.

இதற்கு எமது நிர்வாக அலகு சரியில்லையா? அல்லது இதை சீர் செய்ய முடியாதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒரு சாரதி, சிறிய குற்றம் இழைக்கும் போது அவரை இடைநிறுத்தவும் இடமாற்றமும் வழங்கும் சபை ஏன் தொழிலாளர் உரிமையை கொடுக்க மறுக்கிறது.

மேற்படி கொடுப்பனவுகளை சீர் செய்ய எமது பிராந்திய கணக்காளரோ எமது சாலை கணக்காளரோ முன்வர வேண்டும்.

எனவே இக் கணக்குகள் 14 நாட்களுக்குள் சீர் செய்யப்பட வேண்டும். இல்லையேல் ஓர் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு முகம் கொடுக்க நேரிடும். இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் அனைத்திற்கும் அதிகாரிகள் , உத்தியோகத்தர்கள் அனைவரும் பதில் கூற வேண்டிய நிலை ஏற்படும். இதை கருத்தில் எடுத்து, எமது தொழிலாளர்களின் கொடுப்பனவுகளை சீர்செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தொழிலாளர்களின் குடும்பங்களும் மேலும் இறந்த நமது தொழிலாளர்களுடைய குடும்பங்களும் இளைப்பாறியவர்களும் இக் கொடுப்பனவுகளுக்கு அலைந்து திரிகின்றனர்.

எனவே விரைந்து நடவடிக்கை எடுக்காது விடின் 14 நாட்களின் பின் எமது தொழிற்சங்க சங்க நடவடிக்கை ஆரம்பிக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் கத்தோலிக்க மதகுருமார் கிளியில் சந்திப்பு

(கனடாவளை)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் கத்தோலிக்க மதகுருமார் கிளிநொச்சியில் விசேட சந்திப்பொன்றில் ஈடுபட்டனர்.

குறித்த சந்திப்பு நேற்றுக் காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம் மேற்கொண்டு வரும் இடத்தில் இடம்பெற்றது.

ஜெனிவா அமர்வின் பின்னர் வடக்கு-கிழக்கு பகுதியில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சந்திக்கும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இச்சந்திப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் தொடர்பிலும், ஓஎம்பி அலுவலகம் தொடர்பிலும் பேசப்பட்டது.

கிளிநாச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 402ஆவது நாளாக போராட்டம் இடம்பெற்று வரும் இடத்தில் பிற்பகல் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பல பெற்றோர் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் உயிரிழக்கும் போது காணாமல்போன தமது பிள்ளைகளை நினைத்தவாறே உயிரிழந்திருப்பார்கள். இந்நிலையில் வடக்கு-கிழக்கில் எமது போராட்டத்தை வலுப்படுத்தவுள்ளோம் ஜெனிவா அமர்வின்போது அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்வரை எமது போராட்டம் தொடரும்.

ஜெனிவாவிற்கு எமது தரப்பாக சென்றவர்கள் என்ன பேசினார்கள், போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் என்னென்ன விடயங்களில் நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம் உள்ளிட்ட விடயங்களை இன்று (நேற்று)8 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை அழைத்து விரிவாக கலந்துரையாடினோம். இதன் போது எமக்கு உறுதுணையாக நின்று செயற்படும் மத தலைவர்களையும் அழைத்து ஆலோசனைகளையும் பெற்றிருந்தோம். எமது போராட்டம் தொடரும் அதே வேளை போராட்ட வடிவங்களையும் மாற்றவுள்ளோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். (2-315)

## தமிழ் அரசியல் கைதி

# ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் யோகேஸ்வரன் கோரிக்கை






(கொழும்பு)

தமிழ்அரசியல்கைதியான ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, அவரை விடுதலை செய்யவேண்டுமென, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உருக்கமான கோரிக்கையை முன்வைத்தார்.

"இந்த நாட்டில், மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) பல குழப்ப நிலைகளை முன்னர் ஏற்படுத்தியிருந்தது. எனினும், அதற்கு அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கி, அரசியலிலும் ஈடுபடுத்தியுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

கிரான் பிரதேசத்தில், பிரதேச இளைஞர்களால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆனந்த சுதாகரனின் விடுதலை செய்யக் கோரிய கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்டு, கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிளிநொச்சியைச் சேர்ந்த அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனுக்கு பொது மன்னிப்பு வழங்கி, அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

"இந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைப்பதற்காக, தமிழ் மக்கள் வாக்களித்து, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தனர். தாங்கள் கருணையாக நின்று, அவரை விடுதலை செய்ய முன்வர வேண்டும்.

"அரசியல் கைதி ஆனந்த சுதாகரன், தமது மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொள்ள வந்தபோது, அவரது பிள்ளை, தந்தையுடன் பொலிஸ் வாகனத்தை நாடிச்சென்றமை, மக்களின் மனதில் அனுதாப உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

"எனவே, அப்பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, தாங்கள் கருணையாக நின்று, சுதாகரனை விடுதலை செய்ய முன்வர வேண்டும்" என உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். (இ-7)

# இஸ்ரேலில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு எதிராக நடவடிக்கை



(கொழும்பு)

ஜப்பானிலோ அல்லது இஸ்ரேலிலோ தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்காக இடைத்தரகர்களுக்கு எந்த விதப் பணமும் செலுத்த வேண்டியதில்லை என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.


இதேவேளை இஸ்ரேலுக்கு சென்று சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் இடம் பெற்ற இஸ்ரேலில் விவசாய தொழிற்றுறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்ற இளைஞர்களுக்கு விமான டிக்கட்டுக்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஜப்பானில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பது வெளிநாட்டு பணியகம் மற்றும் அரசாங்கத்தின் ஒரேயொரு வெளிநாட்டு பிரதி நிறுவனமான இலங்கை வெளிநாட்டு முகவர் நிலையமாகும் என்று தெரிவித்த பிரதி அமைச்சர் இஸ்ரேலில் தொழில் வாய்ப்பிற்காக செல்வோர் தொழில் வாய்ப்பிற்கான காலஎல்லை முடிவடைந்தவுடன் உடனடியாக இலங்கைக்கு திரும்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட விசாக்காலப் பகுதிக்கு மேலதிகமாக அங்கு சட்டவிரோதமாக தங்கியிருப்பதன் மூலம் மற்றொரு இலங்கையருக்கான தொழில்வாய்ப்பிற்கான சந்தர்ப்பம் இல்லாமல் போகும். உரிய காலத்திற்குள் தொழில் வாய்ப்பிற்கான காலத்தை பூர்த்தி செய்து இலங்கைக்கு திரும்புவோருக்கு மீண்டும் அந்நாட்டில் தொழில்வாய்ப்பிற்காக செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் இஸ்ரேலில் தங்கியிருப்போருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவ்வாறானோரினால் எமது நாட்டுக்கு கிடைக்கவுள்ள தொழில் வாய்ப்பிற்கான கோரிக்கையை நாம் இழப்போம் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)



இராவ் பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளையின் உருவச்சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை யா/ ஏழாலை மகா வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்றது. சி.வை. தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த சபையின் அமைப்பாளர் த.திருஞானசம்பந்தரால் அடிக்கல் நாட்டப்படுவதையும் வித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)


ஜெய் ஸ்ரீ மாதாஜி

சஹஜ யோகா இலங்கை, நிர்மல பூமி ஆச்சிரமம் வழங்கும்



ஆத்ம விழிப்புணர்ச்சி முகாம்

27.03.2018 செவ்வாய்க்கிழமை
TCT மண்டபம்
(நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
3.00p.m-6.00p.m

28.03.2018 புதன்கிழமை
சிவபூமி மடம்,
கேணியடி, கீரிமலை
10.00a.m-2.00p.m

ஆரோக்கியமின்மை, தீய பழக்கம், மனச்சோர்வு, ஞாபக சக்தியின்மை, கல்வியில் வளர்ச்சியின்மை, தேவையற்ற எண்ணங்கள், தனித்திறமையின்மை இவைகளிடமிருந்து விடுபட நாம் சித்தம் சிதறி அலைகின்றோம். ஏனோ நமக்கு பதில் புரிவதில்லை! **இதோ ஓர் அரிய வாய்ப்பு!** நமக்குள் இருக்கும் சக்தியை விழிப்படையச் செய்வதன் மூலம் வெற்றி பெறல் என்பது இலகுவில் சாத்தியமாகும்.

அனைவரும் வருக அனுமதி இலவசம்!

தினசரி சஹஜ யோகா வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களிற்கு (3284)

T.P:
021 222 8212,
011 259 8694

சஹஜ யோகா இலங்கை
நிர்மல பூமி ஆச்சிரமம்
இல. 19/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா:18 சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: B/8369

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'5'
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: B/8371

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி.பா: 13
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/8372

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 48 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:ACMA, ACCA, CGMA/வங்கியாளர்
தொ.இ: B/8375

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 4 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: MScIT/லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6812

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 22 செவ் 7 இல்
உயரம்: 157cm
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6820

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CBF/வங்கியாளர்
தொ.இ: G/6822

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 62
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/6824

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உடையார்கட்டு குளத்திலிருந்து நீரை எடுப்பதை நிறுத்துங்கள்

# இல்லையேல் சிறுபோகச் செய்கையைக் கைவிடுகின்றோம்

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக விவசாயிகள் ஆர்ப்பாட்டம்








(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உடையார் கட்டுக்குளத்திலுள்ள நீரை சிறுபோகச் செய்கைக்கு பயன்படுத்த முடியாத அளவில் தேவைக்கு அதிகமாக இராணுவத்தினரும் சிவில் பாதுகாப்பு படையினரும் பயன்படுத்துவதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக தெரிவித்து விவசாய அமைப்புக்கள், விவசாயிகள் ஒன்றிணைந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குளத்திலிருந்து நீர் எடுப்பதை நிறுத்துங்கள், இல்லையேல் சிறுபோகத்தை கைவிடுகிறோம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத் திற்குட்பட்ட உடையார்கட்டுக் குளத்தில் இருந்து படையினரின் முகாம் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக் களத்துக்கு நீர் எடுப்பது சட்டத்துக்கு முரணானதும் மக்களுக்கு குறிப்பாக விவசாயிகள் நன்னீர் மீன்பிடி தொழிலாளிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இதை உடனடியாக நிறுத்துமாறு கடந்த புதுக்குடியிருப்பு அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு இதனை நிறுத்தி உபகரணங்களை அகற்ற உத்தரவிடப்பட்டு இராணுவத்தினர் சம்மதமும் வழங்கியிருந்தனர்.

இருப்பினும் :: நேற்று வரை அவை அகற்றப்படவில்லை. இதனால் அபிவிருத்திக்குழுவில் உறுதியளித்த தீர்மானத்தை நிறைவேற்றாது இராணுவம் உதாசீனம் செய்துள்ளது எனவும் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரியும் இல்லையேல் தாம் சிறுபோகத்தை கைவிடுவதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள உடையார்கட்டுக் குளத்தில் படையினர் தமது தோட்ட செய்கைகளுக்காக மூன்றுக்கு மேற்பட்ட பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி குளத்தின் நீரை எடுத்து வருகின்றனர்.

இதனால் குளத்தின் நீர் மட்டம் மிக வேகமாக குறைவடைவதுடன், இவ்வாண்டு முழுமையான சிறுபோகச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுமென விவசாயிகளால் பல தரப்பினரிடமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, இது தொடர்பில் கடந்த மாதம் 26 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 12 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தின் போது விவசாயிகளால் குளத்தில் இராணுவத்தினர் நீர் எடுப்பதால் எமது விவசாய செய்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. எனவே குளத்தில் உள்ள இயந்திரங்களை அகற்றி எமக்கு விவசாயத்தை உரிய முறையில் செய்ய அனுமதிக்குமாறு கோரப்பட்டது.

பல்வேறு கருத்துக்களின் பின்னர் குறித்த நடவடிக்கை சட்டவிரோதமானது. அதை நிறுத்தவேண்டும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் அழுத்தமாக தெரிவித்தார். இதை தொடர்ந்து இது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு இராணுவத்துக்கு தெரிவிக்கப்பட்டது. இதற்கு இராணுவதரப்பு சம்மதமும் தெரிவித்தது.


எது எவ்வாறிருப்பினும் நேற்று வரை குறித்த இயந்திரங்கள் அகற்றப்படவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு பிரதேச அபிவிருத்திக்குழு தீர்மானத்தை நிறைவேற்றி உடனடியாக இயந்திரங்களை அகற்றுமாறும் ஏற்கனவே விதைப்புக்கு காலம் கடந்துள்ளதாகவும் இயந்திரங்கள் அகற்றாவிடில் சிறுபோகத்தை தாம் கைவிடப்போவதாகவும் தெரிவித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி பல்வேறு தரப்பினருக்கும் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களைக் கையளித்தனர்.

இதனடிப்படையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருக்கான மகஜரை திட்டமிடல் பணிப்பாளர் பெற்றுக் கொண்டார். வடக்கு மாகாண முதலமைச்சர் விவசாய அமைச்சருக்கான மகஜர்களையும் தனக்கான மகஜரினையும் வடக்கு மாகாண உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் இது தொடர்பில் இன்று இடம் பெறும் மாகாண சபை அமர்வில் தீர்மானம் ஒன்றை எடுக்க பிரேரணை ஒன்றை கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகம் சென்ற உறுப்பினர்கள் மாவட்ட செயலாளருக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் இராணுவத் துடன் கலந்துரையாடுவதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார். (2-281-315)




### வவு.ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில்

## மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்காமையால் முடிவுகள் எடுப்பதில் நேற்று சிக்கல் நிலை

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இணைத் தலைவரான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான பல்வேறு முடிவுகளும் முக்கியத்துவம் வாய்ந்த சில தீர்மானங்களும் எடுக்கப்பட வேண்டியிருந்தது. இருப்பினும் குறித்த கூட்டத்தில் இணைத் தலைவரான வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, இ.இந்திரராசா உள்ளிட்டோர் கலந்து கொள்ள வில்லை.

இந்நிலையில், மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ளாமையால் முடிவுகள் எடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (2-250-281)

### உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம்

## ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளின் கல்விச் செலவுகளை பொறுப்பேற்பு



(பனிக்கன்குளம்)

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் இரு பிள்ளைகளின் கல்விக்கான செலவினை உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம் பொறுப் பேற்பதாக தெரிவித்து முதற்கட்ட உதவிகளை நேரில் சென்று வழங்கியுள்ளனர்.

சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் மனைவி கடந்த 15 ஆம் திகதி மரணமடைந்துள்ள நிலையில் அவர்களின் இரு பிள்ளைகளும் அம்மம்மாவின் அரவணைப்பிலுள்ளனர்.

நேற்று முன்தினம் உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மணிவண்ணன் தனுசன், பொருளாளர் கிரிசாந்தன், கிளிநொச்சி இணைப்பாளர் எடிசன் ஆகியோர் நேரடியாகச் சென்று இரு பிள்ளைகளின் கல்விச் செலவை பொறுப்பேற்பதாக தெரிவித்துள்ளனர். (2-9)

# கனகராயன் குளத்திலுள்ள பொதுக்காணியில் இருந்து பொலிஸார் வெளியேற வேண்டும்

## வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானம்

(குருமன்காடு)

**வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான காணியை பொலிஸார் விடுவிக்க வேண்டும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

கனகராயன்குளம் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான காணி பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை விடுவிக்குமாறு வவுனியா வடக்கு பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும், மாவட்ட அரச அதிபர் அந்தக் காணியை பொலிஸாருக்கு வழங்குமாறு தெரிவித்துள்ளார் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து இணைத் தலைவர் வடக்கு மாகாண முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் குறித்த காணிக்கு பதிலாக கனகராயன்குளம் பொலிஸாருக்கு வேறு காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தற்போது விளையாட்டு பயிற்சிக்காக அதை பயன்படுத்துகிறார்கள் எனத் தெரிவித்ததுடன், அக்காணியை விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபரிடம் இது தொடர்பில் விளக்கம் கோரப்பட்ட போது, கனகராயன் குளம் முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் இருப்பதால் தாம் முடிவு எடுக்க முடியாது எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த காணி தொடர்பில் நடவடிக்கை எடுத்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. (2-250)

# வவுனியா காமினி மகா வித்தி. மும்மொழி பாடசாலையாக மாற்றம்

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(குருமன்காடு)

வவு/வவுனியா காமினி மகா வித்தியாலயத்தை மும்மொழி பாடசாலையாக மாற்றுவதாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் போது வவுனியா அரசாங்க அதிபர் சோமரத்தின விதான பத்திரன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது மாவட்ட செயலகத்திற்கு அருகேயிருக்கும் வவு/வவுனியா காமினி மகா வித்தியாலத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் கற்கக்கூடிய பாடசாலையாக இதனை அபிவிருத்தி செய்வதற்கும் அதேபோன்று இவ் விடயம் தொடர்பாக பரீட்சை ஆணையாளர், கல்வி அமைச்சரின் செயலாளர்களுடன் கலந்துரையாடி வடக்கு மாகாணத்தின் பரீட்சைகள் நடைபெறும்நிலையமாகவும் மாற்றியமைக்கவும் தீர்மானித்துள்ளேன் என தெரிவித்தார். (2-250)

# உணவகம், இரு ஹாட்வெயார் கடைகள் உடைக்கப்பட்டு பொருட்கள், பணம் திருட்டு

## ஓமந்தையில் சம்பவம்



(ஓமந்தை)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் ஒரு உணவகம் உட்பட இரு ஹாட்வெயார் கடைகள் உடைக்கப்பட்டு பொருட்கள், பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக கடைகளின் உரிமையாளரினால் ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு கடைகளைப் பூட்டிவிட்டு வீடு சென்றஉரிமையாளர்கள்நேற்றுக்காலை கடைகளைத் திறப்பதற்காக வந்தபோது கடைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு பொருட்கள், பணம் என்பன திருட்டுப் போயுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதனையடுத்துகடைகளின் உரிமையாளர்களினால் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் கைரேகைப் பதிவுகளையும் எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

## முதன்முறையாக

# சமகால உரை பெயர்ப்புச் சேவையுடன் ஆரம்பமானது வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம்




(குருமன்காடு)

வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் முதன் முதலாக சமகால மொழி பெயர்ப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் மொழி பெயர்ப்பு




வசதிகள் இன்மையால் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் அலுவலர்கள், அரசியல் வாதிகள் ஆகியோருக்கு பெரும் சிரமமான நிலைகாணப்பட்டிருந்தது.

இதன் காரணமாக இறுதியாக நடைபெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் சமகால மொழி பெயர்ப்பு வசதிகள் வேண்டும் என அரசியல் வாதியொருவரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இதன் நிமித்தம் இம்முறை கூட்டத்திற்கு மொழி பெயர்ப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அனைவரும் சமகாலத்தில் மொழி பெயர்ப்பை செவிமடுப்பதற்கான கருவிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (2-250-281)

# இரு நூல்கள் வெளியீடு

(வவுனியா)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் வவுனியா ஆங்கிலச் சங்கமும் இணைந்து நடத்தும் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசனின் மொழி பெயர்ப்பில் உருவான "சுதந்திரம்" - தென்னாசியக் கவிதைகள் (தமிழில்) "My Choice Sri Lanka Tamil Poetry in English ஆகிய இருநூல்களின் வெளியீடு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன், ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்) ஆங்கிலக் கல்விச் செல்வர் சு. டூபால சிங்கம் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறும்.

நூல்களின் வெளியீட்டுரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் , வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க. சுவர்ணராஜா ஆகியோர் ஆற்றுவார்கள்.

ஆய்வுரைகளை வவுனியா கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபன், "சுதந்திரம்" பற்றிய நூல்தொடர்பிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கிலமொழி கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் "My Choice;" பற்றிய நூல் தொடர்பிலும் நிகழ்த்துவார்கள்.

ஏற்புரையை கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் ஆற்றுவார். (2)

# யுத்த அழிவின் சின்னமாக காட்சியளித்த நீர்த்தாங்கி கிளிநொச்சியில் அகற்றம்



(பரந்தன்)


கிளிநொச்சி நகரில் அமைந்திருந்த சேதமடைந்த நீர்தாங்கியை அகற்றும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரில் யுத்த அழிவின் சின்னமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த குறித்த நீர்த்தாங்கியை அகற்றுவதற்கான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதியில் இருந்து நீர்த்தாங்கி ஒன்று 2000ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் வீழ்த்தப்பட்டிருந்ததுடன், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கியும் இறுதி யுத்தத்தின்போது வீழ்த்தப்பட்டிருந்தது. இந்நிலையில் நீர்த்தாங்கி யுத்தம் முடிவுற்றதன் பின்னர் யுத்த ஞாபக சின்னமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது குறித்த நீர்த்தாங்கி அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-312-15)

# வவுனியா-யாழ் வீதியில் இடம்பெறவிருந்த விபரீதம்-பொலிஸாரால் தடுக்கப்பட்டது



(குருமன்காடு)

வவுனியா- யாழ்.வீதியில் புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெறவிருந்த விபரீதம் பொலிஸாரினால் தடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.வீதியில் அழகு சேர்த்த ஆங்கிலேயர் காலத்து வாகை மரங்கள் வீதி அபிவிருத்தி மற்றும் போடப்பட்ட காப்பெற் காரணமாகவும் முதிர்வு காரணமாக உயிரிழந்து காணப்பட்டது.

இந் நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினருக்கு பல தரப்பினரும் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த மரங்களின் கிளைகள் அகற்றப்பட்டிருந்தன.

இதனையடுத்து வீதியோரத்தில் நின்ற காய்ந்த மரத்தின் பாரிய பகுதிக்கு விசமிகள் சிலர் நேற்று முன்தினம் தீயிட்டுள்ளனர்.

இதன் காரணமாக மரத்தின் பல பகுதிகளுக்கும் தீ பரவியிருந்த போதிலும் அங்கிருந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் பௌசர் மூலம் நீர் கொண்டு சென்று தீயை அணைத்துள்ளனர்.

தீ அணைக்கப்பட்டிருக்காவிட்டால் தீயினால் எரிந்த மரம் வீதியில் வீழ்ந்து விபரீதம் ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

### கண்டிக் கலவரத்தின் பிரதான சூத்திரதாரி

# மகாசோன் படையணித் தலைவருடன் பொதுபல சேனாவின் ஞானசாரர் சந்திப்பு


(கொழும்பு)

கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத வன்முறைகளைத் தூண்டிவிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள, மகாசோன் படையணியின் தலைவர் மற்றும் செயற்பாட்டாளர்களை பொதுபல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் சந்தித்துள்ளார்.

இன வன்முறைகளைத் தூண்டிய மகாசோன் படையணியின் தலைவர் அமித் வீரசிங்க உள்ளிட்டவர்கள் அநுராதபுர சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஜப்பானில் இருந்து திரும்பியவுடன், ஞானசார தேரர் அநுராதபுர சிறைக்குச் சென்று இவர்களைச் சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.

ஞானசார தேரரும், கண்டிக்குச் சென்ற பின்னரே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



### கண்டிக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பதிவு

(கொழும்பு)

கண்டி கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இழப்பீடுகளை பெற்றுக் கொள்ள, அதற்குரிய படிவங்களை விரைவாக பூர்த்தி செய்து கண்டி மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்குமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக பணிப்பாளர் எஸ்.எம். பதுர்தீன் தெரிவித்தார்.

கண்டி, த யங் பிரெண்ட்ஸ் (The Young Friends) மற்றும் கண்டி நகர வர்த்தக சங்கம் ஆகிய இணைந்து நேற்று முன்தினம் கண்டி ஜின்னாஹ் மண்டபத்தில் நடத்திய நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவம், பொலிஸ் முறைப்பாட்டு பத்திரத்தின் பிரதி, இழப்புகளின் மதிப்பீடு அறிக்கை, உறுதிப்பத்திரம், வங்கிக் கணக்கு புத்தகத்தின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி என்பவற்றை இணைத்து கண்டி மாவட்ட செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கண்டி வன்முறை தொடர்பான விசேட கவுண்டரில் ஒப்படைக்குமாறு அவர் தெரிவித்தார்.

சுமார் 660 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் சுமார் 130 விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்த அவர், இழப்பீடு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டவர்கள் சிலர் தமது காசோலைகளை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதுடன், அவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக பணிப்பாளர் எஸ்.எம்.பதுர்தீன் கோரிக்கை விடுத்தார். இதேவேளை, உறுதிப்பத்திரங்களை இழந்தவர்கள் பிரதேச செயலகத்தின் ஊடாக தமது பதிவை உறுதிசெய்து ஒப்படைக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கட்சியைப் பாதுகாப்பதற்காக பதவியை தூக்கியெறியவும் தயார்

### ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

கட்சியை பாதுகாப்பதற்காக பதவிகளை தூக்கியெறியவும் தயார் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவான உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம், கட்சியை பாதுகாப்பதற்காக பதவிகளை தூக்கியெறிந்துவிட்டு களத்தில் நின்று போராடுகின்ற முடிவுகளை எடுப்பதற்கும் ஒருபோதும் பின்னிற்கப்போவதில்லை.

தனித்துவத்துடன் பயணிக்கவேண்டிய பாதை குறித்து தயக்கமில்லால் முடிவெடுக்கின்ற காலத்தில் தாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம் எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (இ-7)



### அனலடிக்காவை சந்திக்காததால் அதிர்ஷ்டம் பேஸ்புக் குறித்து பிரதமர் புதிய தகவல்

(கொழும்பு)

உலகம் முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பேஸ்புக் நிறுவனம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது சமகால ஜனாதிபதி ட்ரம்பின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள 50 மில்லியன் பேஸ்புக் கணக்குகளுக்குள் அத்துமீறி தகவல்களை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

லண்டனில் செயற்படும் கேம்பிரிட்ஜ் அனலடிக்கா நிறுவனம் இந்த மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நிறுவனம் தன்னையும் சந்திக்க முயற்சித்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தன்னை சந்தித்து சேவை வழங்க குறித்த நிறுவனம் முன்வந்ததாகவும், தான் அதனை நிராகரித்ததாகவும் பிரதமர் தெரிவித்தார்.

குறித்த நிறுவனம் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவை வழங்க தனது விருப்பத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்ததாகவும், அதிர்ஷ்டவசமாக அவர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளவில்லை எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போது பிரதமர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

### பிரதமர் ரணில் மீது நம்பிக்கையில்லை சு.கவின் மூவருக்கெதிராக முறைப்பாடு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கையளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூவருக்கு எதிராகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் கையளிக்கப்பட்டுள்ள அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, துறைமுகங்கள் மற்றும் கப்பல் விவகார பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம மற்றும் காணி இராஜாங்க அமைச்சர் டி.பீ. ஏக்கநாயக்க ஆகியோரே கையொப்பமிட்டுள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ள இந்த மூவருக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய மூவர் கைது

(கொழும்பு)

பேருவளை - பத்தகட பிரதேசத்தில் நேற்றுக் காலை வலான ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளை தாக்கிய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடொன்றில் சட்டவிரோத சிகரெட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலுக்கு அமைய அங்கு சென்ற அதிகாரிகள் மீதே தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதில் காயமடைந்த வலான ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் இரண்டு பேர், பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இதற்கு முன்னரும் சிகரெட் மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

### கோடீஸ்வர வர்த்தகர் கொலை

# தீவிர விசாரணைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

மாலபே - சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாகிச் சூட்டில் உயிரிழந்த கோடீஸ்வர வர்த்தகரின் கொலையுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கொலை தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள தகவலுக்கு அமைய மூன்று பிரிவுகள் ஊடாக தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் மேற்கொண்ட இந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த வர்த்தகர், பாதாள குழுவின் தலைவர் அங்கொட லொக்காவுடன் தொடர்புடையவர் என தெரியவந்துள்ளது.

இவருக்கு அண்மைகாலமாக அச்சுறுத்தல் காணப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (இ-7)





ஆ. முல்லை திவ்யனின் ஏழாவது நூலான ''முல்லை நிலமும் நந்திக் கடலும்'' என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியந்தி ஆலடிப் பகுதியில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொண்டார்.

(படங்கள்:-மகாலிங்கம்)

# ஜனாதிபதியைப் பாதுகாத்த வாகனங்கள் கடலில் மூழ்கின



(கொழும்பு)

யுத்த காலத்தின்போது ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த குண்டு துளைக் காத அதிசொகுசு வாகனங்கள் மற்றும் ஜீப் ரக வாகனங்கள் என்பன நேற்று ஆழமான கடலில் மூழ்கி அழிக்கப்பட்டன.

8 மகிழுந்துகள் மேற்கு பிரதேச ஆழமான கடல் பகுதியில் கொட்டி அழிக்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல வருடங்கள் பழைமையான குறித்த வாகனங்களை புதுப்பிக்க பாரிய செலவு ஏற்படும் என்ற காரணத்தினால் இவற்றை அழிக்க அரசாங்கம் தீர்மானித்ததாக கடற்படை பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் கே. சீ. சீ உதயங்க தெரிவித்தார்.

குறித்த வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தொலைத் தொடர்பு கருவிகள் மற்றும் வேறு பெறுமதியான பாகங்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குண்டு துளைக்காத வாகனங்களை ஏலத்தில் விடவும் முடியாத நிலையிலேயே இவ்வாறு அழிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.


ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடாக கடற்படையினருக்கு குறித்த எட்டு வாகனங்களும் வழங்கப்பட்டிருந்தன.

அமெரிக்கா பிரித்தானியா, ரஷ்யா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகரக அதிகாரிகள் பயன் படுத்திய குண்டு துளைக்காத வாகனங்களும் அவற்றுள் அடங்குகின்றன.

இதற்கிடையில், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிடம் இருந்த வெலின் என்ற கப்பலும் எதிர்வரும் தினத்தில் அழிக்கப்படவுள்ளது.

குறித்த கப்பல் ஏல விற்பனைக்காக விடப்பட்ட போதிலும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறைந்த அளவிலான விலை பெறுமதி யையே கொண்டிருந்தது.

பின்னர், குறித்த கப்பல் கடற்படையினரால் பொறுப் பேற்கப் பட்டிருந்தது. எனினும், அதனை தற் போது பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# அதிகாலை 4 மணிக்கு சத்தியப்பிரமாணம்



(ஹற்றன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வெற்றி பெற்ற 120 உறுப்பினர்கள் நேற்று அதிகாலை 4 மணியளவில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கொட்டகலை ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் முன்னிலையில் இந்த சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு, குருநாகல், கண்டி, மாத்தளை, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 43 சபைகளில் தெரிவான 120 உறுப்பினர்கள், சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஊவா மாகாண, மற்றும் மத்திய மாகாண அமைச்சர்களான செந்தில் தொண்டமான், எம்.ரமேஷ்வரன், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கணபதி கனகராஜ், ஏ.பி.சக்திவேல், எஸ்.பிலிப்குமார், பி.மதியுகராஜா, ஊவா மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய அமைப்பாளருமான எஸ்.இராஜதுரை உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# முகப்புத்தக விவகாரம் முஸ்லிம் மாணவனுக்கு பிணை வழங்க மறுப்பு

(கொழும்பு)

முகப்புத்தகத்தின் ஊடாக இனங்களுக்கிடையில் வன் முறைகளை ஏற்படுத்தும் விதமான பதிவுகளை மேற்கொண்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கொழும்பின் பிரதான பாடசாலை ஒன்றின் மாணவனுக்கு பிணை வழங்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் மறுத்துள்ளது.

மேலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மாணவனை 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் ஷானிமா விஜேபண்டார முன்னிலையில் நடைபெற்ற போது சந்தேகநபரான மாணவன் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான முஸ்லிம் மாணவன் சிங்களவர் ஒருவரின் பெயரில் முகப்புத்தகத்தில் இனங்களுக்கிடையில் வன்முறைகளை ஏற்படுத்தும் விதமான பதிவுகளை மேற்கொண்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சு.க.தலைமையகம் முன் நேற்று சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

ரிதிமாலியத்த பிரதேச சபையின் முன்னாள் துணைத் தலைவர் ஜெயவீர ரத்நாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தின் முன்னால் நேற்றுக் காலை முதல் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளார்.

ரிதிமாலியத்த பிரதேச சபைக்காக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களை நியமிக்கும் போது தமக்கு அநீதி இடம் பெற்றுள் ளதாக கூறி அவர் இவ்வாறு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளார்.

மஹியங்கனை தொகுதி அமைப்பாளருக்கு நெருங் கிய பெண் மற்றும் மேலும் ஒருவரும் பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)





யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மூத்த முதல்வர்கள் சத்தியப்பி ரமாணம் செய்வதைப் படங்களில் காண லாம். (படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# அதிகாலையில் துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

அத் துருகிரிய ஜோதியால ஒழுங்கையில் அமைந்துள்ள வீடொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இடம் பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவரின் செயலாளரின் வீட்டினர் மீது இந்த துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. சம்பவத்தில் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என்பதோடு மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

6ம் ஆண்டு நினைவஞ்சலி

பொன்ராசா இரத்தினாதேவி

பிறப்பு
1941.05.17

இறப்பு
2012.03.27



நினைந்து நினைந்து
நெஞ்சம் உருகுதே
உந்தன் நினைவே
என் நினைவு

"செல்வவாசம்", வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை. (3364)

கணவர்
செ.பொன்ராசா

30ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.12.1922
மறைவு 28.03.1988

எங்கள் குலதெய்வம்
அமரர்
வ.வ.கயிலாயபிள்ளை

எமையெல்லாம் நல்வழிப்படுத்தி இறுதிவரை ஆசி வழங்கி
வானுறையும் தெய்வமாகிவிட்ட ஐயாவே
ஆண்டுகள் முப்பது ஆனாலும்
உங்கள் அன்பு முகத்தை என்றும் மறவோம்

(3383)

"கமலாம்பிகை பவனம்"
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

என்றும் உங்களை மறவா
குடும்பத்தினர்.

# பாரதம்

## சேலம்-சென்னை இடையேயான விமான சேவைகள் மீண்டும் ஆரம்பம்



(சேலம்)

சேலம் - சென்னை இடையே மீண்டும் விமான சேவையை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி ஆரம்பித்து வைத்தார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே கமலாபுரத்தில் கடந்த 1993 ஆம் ஆண்டு விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டு சென்னை-சேலம் இடையே விமான சேவை தொடங்கப்பட்டது.

போதியளவில் வருமானம் இல்லா ததாலும், கட்டணம் அதிக மாக இருந்ததாலும் இந்த விமான சேவை 2010 ஆம் ஆண்டு இரத்து செய்யப்பட்டது. இந்த நிலையில், மத்திய அரசின் உதான் திட்டத்தின் மூலம் சேலம் விமான நிலையம் மீண்டும் செயற்பட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. அதன்படி 7 ஆண்டுகளுக்கு பிறகு 'ட்ரூஜெட்' நிறுவனம் மூலம் சேலத்தில் இருந்து சென்னைக்கு பயணிகள் விமான சேவை நேற்று முன்தினம் முதல் அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எடப்பாடி பழனிச்சாமி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது,

சேலம் விமான நிலையத்தில் இருந்து நாட்டின் பிற நகரங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு செல்லவும், அங்கிருந்து சேலம் வரவும் பெரியரக விமானங்களை இயக்கும் வகையில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. அது முடிந்தவுடன் சேலத்தில் இருந்து பெரியரக விமானங்களும் இயக்கப்படும் என்றார்.

72 இருக்கைகள் கொண்ட சென்னை-சேலம் விமானத்தில் கட்டண சலுகையாக ஒருவழி பயணத்திற்கு ரூபாய் 1,499 அறவிடப்படுகின்றது.

மேலும் குறிப்பிட்ட இருக்கைகளுக்கு இந்த சலுகை என்றும் நிர்ணயிக்கப்பட்ட இருக்கைகளுக்கு பின்னர் ரூபாய்2 ஆயிரத்து 499 வரை கட்டணம் அறவிடப்படும் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (10)

## புதுச்சேரி சட்டசபைக்குள் அத்துமீறி நுழைந்த பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் தடுத்து நிறுத்தம்



(புதுச்சேரி)

புதுச்சேரியில் மத்திய உள் துறையால் நியமிக்கப்பட்ட பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் நேற்று சட்டசபைக்குள் நுழைய முயன்றபோது அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்காமல் பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

பா.ஜ.க.வைச் சேர்ந்த சாமிநாதன், செல்வ கணபதி மற்றும் சங்கர் ஆகிய 3 பேரை நியமன எம்.எல்.ஏக்களாக மத்திய உள்துறை நியமித்தது. மாநில அரசை ஆலோசிக்காமல் நியமிக்கப்பட்டதால் அவர்களின் நியமனத்தை புதுச்சேரி சபாநாயகர் ஏற்க மறுத்தார்.

இந்த விவகாரம் தொடர்ந்து புதுச்சேரி அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி வந்த நிலையில், பா.ஜ.கவைச் சேர்ந்த மூவரையும் எம்.எல்.ஏக்களாக நியமித்தது செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. லட்சுமி நாராயணன் மனு தாக்கல் செய்தார்.

இந் நிலையில் புதுச்சேரி சட்டசபை வரவு-செலவு திட்ட கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் நேற்று ஆரம்பமானது.

இதில் பங்கேற் பதற்காக நியமன எம்.எல். ஏக்கள் மூன்று பேரும் சட்ட சபைக்கு வந்த போது அவர்களை உள்ளே செல்ல பொலிஸார் அனுமதியளிக்கவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மூன்று பேரும் பொலிஸருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதன்பின்னர் சட்டசபைக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் பொலிஸ் அதிகாரி பேச்சுவார்த்தை நடத்தினார்.



இதனால் சட்டசபை வளாகத்தில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது. (10)

## ஸ்டெர்லைட் ஆலைக்கு எ... லண்டனில் தமிழர்கள் ஆர்...

(லண்டன்)

ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து லண்டனில் அந்நிறுவனத்தின் தலைவர் வீடு முன் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உற்பத்தி ஆலையால் கடல் வளத்துக்கும், சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக புகார்கள் எழுந்த நிலையில், ஆலையை மேலும் 600 ஏக்கர் பரப்பில் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. போராட்டங்கள் நடக்கின்றன. ஸ்டெர்லைட் ஆலை வேதாந்தா குழுமத்தின் துணை நிறுவனமாகும்.

இந்நிலையில், லண்டனில் உள்ள தமிழர்களும் ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

லண்டனில் வேதாந்தா குழுமத்தின் தலைவர் அனில் அகர்வால் வீடு முன்பு ஏராளமான தமிழர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவியான பறை அடித்தபடியும் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கோஷமிட்டும் போராட்டத்தில் தமிழர்கள் ஈடுபட்டனர். சுற்றுச் சூழலுக்கும், கடல் வளத்துக்கும் மக்களின் உயிருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஸ்டெர் லைட் ஆலையை ஆதரிப்பதை இங்கிலாந்து அரசு நிறுத்த வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (10)



## வணிக நிலையத்தில்... 60 பேர் உடல் கரு...

### ரஷ்யாவில் சம்பவம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் சைபீரியா மாகாணத்தில் உள்ள வணிக நிலையத்தில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 60 பேர் பலியாகியுள்ளனர்.

ரஷ்யாவின் சைபீரியா மாகாணத்தில் உள்ளது கெம்ரோவோ நகரத்திலுள்ள வணிக நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கினர். அங்கு குவிந்திருந்த மக்கள் அலறியடித்தபடி அங்குமிங்கும் ஓடினர். தகவலறிந்து அங்கு தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தீ விபத்தில் சிக்கி 3 பெண்கள், ஒரு குழந்தை உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக பலியாகினர் என்றும், மேலும், 30க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என்றும் முதல் கட்டமாக தகவல் வெளியானது.



இந்நிலையில், வணிக நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 60ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரி...

## இணையத்தளங்களை உளவு பார்க்கு... கிலிக்ஸ் நிறுவனத்தின் ஆய்வில் அதிர்...

(பெர்லின்)

பேஸ்புக் நிறுவனம் உலகிலுள்ள 30 சதவீதம் இணையத்தளங்களை அனுமதியின்றி உளவு பார்ப்பதாக அதிர்ச்சிகரமான தகவல் ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

ஜேர்மனியைச் சேர்ந்த கிலிக்ஸ் (Cliqz) என்ற நிறுவனம் பேஸ்புக் குறித்து ஒரு ஆய்வு நடத்தியுள்ளது.

அதில் உலக அளவில் 30வீதம் இணையத் தளங்களைப் பற்றியும் அவற்றைப் பார்வையிடுபவர்களின் தகவல்களை முறைகேடாக பயன்படுத்தி அவர்களை பேஸ்புக் நிறுவனம் உளவு பார்க்கிறது என்று தெரிவித்துள்ளது.

பேஸ்புக்கில் தகவல் திருட்டு நடைபெற்றதால் அதற்கு எதிராக பேஸ்புக்கை நீக்கு என்ற பெயரில் ஹேஸ்டேக் உலகம் முழுதும் பிரபலமாகியுள்ள நிலையில் இந்த அதிர்ச்சி அளிக்கும் தகவல் வெளியாகியுள்ளது.



பேஸ்புக் கணக்கை வேண்டாம் என நீக்கம் செய்தாலும் அந்த கணக்கை வைத்திருந்தவரையும் அவர் பயன்படுத்தும் இணையத் தளங்களையும் பேஸ்புக் இரகசியமாக உளவு பார்க்க முடியும் என்ற அதிரவைக்கும் தகவலை அந்த ஆய்வு முடிவு கூறுகிறது. முக்கியமான தகவலாக பெரும்...

# வெளிநாடு

## கு எதிராக ஆர்ப்பாட்டம்



## தில் திடீர் தீ ருகிப் பலி!

வித்துள்ளனர்.

வணிக நிலையத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடினர். சுமார் 12 மணி நேரம் கழித்து தீயணைப்பு வீரர் கள் போராடி தீயை அணைத் தனர். இந்த



தீ விபத்தால் அருகிலுள்ள கட்டடங்களி லும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். அவர் கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (10)

## ர்க்கும் பேஸ்புக் திர்ச்சித் தகவல்



பான்மை பயனாளர்கள் பயன்படுத் தும் Ad Blocker எனும் செயலி பாது காப்பானவை அல்ல என்றும் அவை யும் பயன்படுத்துப வரின் இணையப் பயன்பாடு குறித்த தகவல்களைத் திருடுகின்றன என்பதை அந்த ஆய்வு உறுதி செய்துள்ளது. (10)

## வைகோவிற்கு எதிராக போர்க்கொடி எழும்பூர் வீதியில் கண்டனப் போராட்டம்

(சென்னை)

மூலக்கொத்தளத்தில் குடி யிருப்புகள் கட்டுவதற்கு வைகோ எதிர்ப்பு தெரிவித்த தால் அவரை கண்டித்து அப்பகுதி மக்கள் ம.தி.மு.க அலுவலகம் அருகே திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடசென்னையில் உள்ள மூலக்கொத்தளம் சுடுகாட் டில் தியாகிகள் நினைவு இடங்கள் அமைந்துள்ளது. இந்த சுடுகாட்டையொட்டி தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் சார்பில் ஆதி திரா விட மக்களுக்கு குடியிருப்பு கள் கட்டப்படவுள்ளன. இத ற்காக 5 ஏக்கர் சுடுகாடு நிலம் கைய கப்படுத்தப்பட்டுள்ள தாக ம.தி.மு.க. பொதுச் செய லாளர் வைகோ குற்றம் சாட் டினார். குடியிருப்புகள் கட்டு வதற்கு எதிர்ப்பு தெரிவித்து ம.தி.மு.க. சார்பில் சென்னை ஆளுநர் அலுவலகம் அருகே கடந்த 13 ஆம் திகதி கண் டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

மூலக்கொத்தளம் சுடு காடு குறித்து சட்டசபையில் விவாதம் எழுந்தபோது, பேசிய துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், 'தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் கட்டும் குடியிருப்புக்கும், கல் லறைக்கும் 300 மீற்றர் இடைவெளி உள்ளது.

எனவே கல்லறைகள் அகற்றப்படாது' என்று விளக் கம் அளித்தார்.

இந்த நிலையில் வைகோ கடந்த 23 ஆம் திகதி மூலக் கொத்தளம் சுடுகாட்டை நேரில் ஆய்வு செய்தார். 'மூலக் கொத் தளம் சுடுகாடு நிலத்தை ஆக்கிரமித்துவிட்டு, வீடு கட் டும் பணியை அடுத்த கட்டத் துக்கு எடுத்து சென்றால் போராட்டத்தில் ஈடுபடு வோம்' என்று தெரிவித்தார்.


வைகோவின் கருத்தி ற்கு மூலக்கொத்தளம் ராம தாஸ் நகர், பால்டிப்போ, போஜராஜன் நகர் பள்ளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர் மக்கள் எதிர்ப்பு தெரி வித்துள்ளனர்.

தங்களுக்கு வீடுகள் வழ ங்கும் திட்டத்தை வைகோ கெடுக்க நினைக்கிறார் என்று குற்றம்சாட்டி சென்னை எழும் பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதற்காக நூற்றுக் கணக்கானோர் வந்தனர்.

இந்த நிலையில் ஆர்ப் பாட்டக்காரர்கள் மீது எழும்பூர் பொலிஸ் நிலையத்தில் ம.தி. மு.க. வடசென்னை மாவட்ட செயலாளர் ஜீவன் புகார் அளித்தார்.

மோதலில் ஈடுபட்ட தொண் டர்களை வைகோ எச்சரித் தார். தனக்கெதிராக நடந்த போராட்டம் குறித்து செய்தி யாளர்களிடம் பேட்டிய ளித்த வைகோ மூலக் கொத்த ளம் சுடுகாட்டில் ஒரு சதுரடியை யேனும் கொடுக்க அனு மதிக்கமாட்டேன் என தெரி வித்துள்ளார். அது அங்கு மேலும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது. (10)

## "நான் தான் நரேந்திர மோடி" ராகுல்காந்தி கிண்டல் டுவிட்



(டில்லி)

நரேந்திர மோடி செயலி யில் பதிவு செய்தவர்களின் விபரங்கள் அமெரிக்க நிறுவ னத்துக்கு பரிமாறப்படுவ தாக எழுந்த சர்ச்சையைய டுத்து, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கிண்டலாக டுவிட் செய்துள்ளார்.

பிரான்ஸ் இணையத் தக வல் பாதுகாப்பு ஆராய்ச்சி யாளர் எலியாட் ஆல்டர்சன் டுவிட்டரில் கடந்த சனிக்கி ழமை சர்ச்சைக்குரிய பதிவு ஒன்றை நேற்று வெளியிட் டார். அதில் இந்திய அரசு தன்னுடைய மக்களுக்காக பிரதமர் மோடியின் பெயரில் 'நரேந்திரமோடி ஆப்ஸ்' என்ற பெயரில் ஒரு செயலியை அறிமுகப்படுத்தியது.

ஆனால், அந்த செயலியை பயன்படுத்தி, அதில் மக்கள் தங்களின் பெயர், வயது, பாலினம் உள்ளிட்ட தனிப் பட்ட விபரங்களை பதிவு செய்யும்போது, அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் அனைத் தும் அவர்களின் அனுமதி யின்றி அமெரிக்காவின் 'கிளவர் டேப்' (Clever Tap) என்ற நிறுவனத்துக்கு பரிமா றப்பட்டு வருகிறது.

இந்த தகவல்கள் அனைத் தும் in.wzrkt.com. என்ற தளத்துக்கு மாற்றப்படுகிறது. இந்த முகவரி அந்த அமெ ரிக்க நிறுவனத்துக்கு சொந்த மானதாகும் எனத் தெரி வித்து இருந்தார்.

ஏற்கனவே பேஸ்புக் நிறு வனத்தோடு தொடர்பு வைத் திருந்த கேம்பிரிஜ் அனாலிட் டிகா நிறுவனத்தின் துணை யோடு காங்கிரஸ் கட்சி 2019 ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திக்க இருக்கிறது என்று பா.ஜ.க குற்றம்சாட்டி இருந் தது. இந்த சூழலில் இந்த விவ காரம் பா.ஜ.கவுக்கு பெரிய நெருக்கடியை அளித்தது.

இதையடுத்து, காங்கி ரஸ் தலைவர் ராகுல் காந்தி அமெரிக்க நிறுவனத்துக்கு நரேந்திரமோடி செயலியில் பதிவு செய்துள்ள மக்களின் தனிப்பட்ட விபரங்கள் பரிமா றப்படுவதை குறிப்பிட்டு கிண் டலாக டுவிட்டரில் பதிவு வெளியிட்டார். அதில் ஹாய், என்னுடைய பெயர் நரே ந்திர மோடி. இந்தியாவின் பிரதமராக இருக்கிறேன். என்னுடைய பெயரில் இருக் கும், அதிகாரபூர்வ செயலி யில் மக்களாகிய நீங்கள் பதிவு செய்யும்போது, உங்களின் அனைத்து தனிப்பட்ட விப ரங்களையும் உங்க ளின் அனுமதியில்லாமல், என் னுடைய அமெரிக்க நண் பர்களின் நிறுவனத்துக்கு கொடுத்துவிடுவேன் என அவர் டுவிட்டரில் பதிவு செய் துள்ளார். ராகுல் காந்தியின் டுவிட்டர் பதிவுக்கு பா.ஜ.கவி னர் கண்டனம் வெளியிட் டுள்ளனர். (10)

## கிணற்றுக்குள் பாய்ந்த ஆட்டோ; 6 குழந்தைகள் உட்பட 10 பேர் பலி

(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலம், நிஜாமாபாத்தில் நேற்று முன் தினம் விவசாய கிணற்றுக் குள் ஆட்டோ கவிழ்ந்த விபத் தில் 6 குழந்தைகள் உட்பட பத்து பேர் பரிதாபமாக உயி ரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலம், நிஜாமாபாத் மாவட்டத்தில் உள்ள முக்பல் பகுதியில் இருந்து மென்டோரா என்ற இடத்தை நோக்கி 14 பயணி களை ஏற்றிய ஆட்டோ சென்று கொண்டிருந்தது. வேகமாக வந்த ஆட்டோ குறுகிய வளைவில் திரும் பியபோது, சாரதியின் கட்டுப்



பாட்டையிழந்து வீதியின் பக்கவாட்டில் உள்ள விவசாய கிணற்றுக்குள் விழுந்தது.

இந்த கோர விபத்தில் 6 குழந்தைகள், 4 பெண்கள் உட்பட பத்து பேர் பரிதாப மாக உயிரிழந்தனர். இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்த தெலுங்கானா முதல மைச்சர் சந்திரசேகர ராவ் உயிரிழந்தவர்களின் குடும் பத்தாருக்கு ஆழ்ந்த இரங் கல்களை தெரிவித்துள் ளார். (10)

## வடகொரியாவுடனான பேச்சுக்கு அமெரிக்கா முயற்சிக்க வேண்டும்

## ஒபாமா வேண்டுகோள்

(சியோல்)

வடகொரியாவுடன் பேச்சு வார்த்தை நடத்த அமெரி க்கா தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டுமென, அமெ ரிக்காவின் முன்னாள் ஜனா திபதி பராக் ஒபாமா தெரிவித் துள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக் கியோவில் சர்வதேச மாநாட் டில் நேற்று முன்தினம் ஞாயி ற்றுக்கிழமை கலந்துகொ ண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாநாட்டில் அவர் மேலும் உரையாற்றிய போது, 'உலகிலிருந்து வடகொரியா தனிமைப்படுத்தப்பட்டபோதும், அந்நாட்டுக்கு அழுத்தம் பிர யோகிப்பதற்கான வழிக ளைக் கண்டறிவது கடினமா கும். ஆகவே வடகொரியா வுடன் சமரசப் பேச்சுவார்த் தையை முன்னெடுக்க அமெ ரிக்கா தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்' என்றார்.

வடகொரியாவின் ஏவு கணை மற்றும் அணுவாயு தச் சோதனைகள் காரண மாக, வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நிலவும் பதற்றத்துக்கு மத்தி யில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் இந்தக் கருத்து வெளிவந் துள்ளது.

இதேவேளை, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயை யும், அமெரிக்காவின் முன் னாள் ஜனாதிபதி ஒபாமா சந் தித்துள்ளார். இதன் போது, இரு நாடுகளுக்கிடையிலான சிறந்த உறவு தொடர்பாக வும், இவர்கள் இருவரும் கவனஞ்செலுத்தியுள்ளனர், என்பது குறிப்பிடத் தக்கது. (10)

## அமெ. தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஜோன் போல்டன் நியமனம்

(வோஷிங்டன்),

அமெரிக்க தேசிய பாது காப்பு ஆலோசகர் பதவியில் இருந்து மெக் மாஸ்டரை நீக்கியும், அவரது இடத்துக்கு போல்டனை நியமித்தும் ட்ரம்ப் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அமெரிக்காவில் ட்ரம்ப் கடந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவி ஏற்ற காலம் முதல் தொடர்ந்து அதிரடி நடவடிக் கைகளை எடுத்து வருகிறார்.

தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் மெக் மாஸ்டரை பத வியை விட்டு நீக்க ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாக 'தி வோஷிங்டன் போஸ்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால் அந்த தகவலை, வோஷிங்டன் வெள்ளை மாளிகை செய்தி தொடர்பா ளர் சாரா சாண்டர்ஸ் மறுத்தார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், "இப்போதுதான் ஜனாதிபதி ட்ரம்பிடமும், தேசிய பாதுகா ப்பு ஆலோசகர் மெக் மாஸ்ட ரிடமும் பேசினேன். பத்திரி கையில் வெளியான தகவலு க்கு முரணாக, அவர்கள் இரு வரிடையே நல்ல பணி உறவு நீடிக்கிறது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மாற்றம் இல்லை" என்று குறிப்பிட்டார்.

ஆனால் மெக் மாஸ்டரை தேசிய பாதுகாப்பு ஆலோச கர் பதவியில் இருந்து ட்ரம்ப் அதிரடியாக நீக்கிவிட்டார்.

அவரது இடத்துக்கு ஜான் போல்டனை (வயது 68) நியமனம் செய்து ட்ரம்ப் உத்தரவிட்டார். இந்த ஜான் போல்டன், ஐ.நா. சபையின் அமெரிக்க தூதராக 2005-2006 காலகட்டத்தில் பணி யாற்றியுள்ளார்.

இது தொடர்பான அறி விப்புகளை ட்ரம்ப், டுவிட்ட ரில் வெளியிட்டுள்ளார். அதில் அவர், "செப்டெம்பர் 4 ஆம் திகதி முதல், ஜான் போல்டன் எனது புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருப்பார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மிகச்சிறப்பாக அந்த பணியை ஆற்றிய மெக் மாஸ்டருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எனது நண்பராக தொடருவார்" என குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் பதவி ஏற்றபின் னர் தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் பதவிக்கு வருகிற 3 ஆவது நபர் என்ற பெயர் ஜான் போல்ட னுக்கு கிடைத்துள்ளது.

தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் பதவிக்கு தான் நியமிக்க ப்பட்டு இருப்பது, எதிர்பாராத ஒன்று. அதே நேரத்தில் இது மிகப்பெரிய கௌரவம் என ஜான் போல்டன் தெரிவித் துள்ளார்.

வரும் மே மாதம் ட்ரம்ப், வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன்னை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிற நிலையில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மாற்றம் முக்கி யத்துவம் வாய்ந்ததாக அமைந் துள்ளது.

ஜான் போல்டன் நியமனத் தால் ஈரான், வல்லரசு நாடு களுடன் செய்துகொண்டுள்ள அணு ஆயுத தடை உடன் படிக்கைக்கு ஆபத்து நேரக் கூடும் என சர்வதேச நாடுகள் எச் சரிக்கை விடுத்துள்ளன. (10)

# புலிகளுக்கு எதிரான போரில் பாரிய சேதங்கள் ஏற்பட்டன

## நாமல் எம்.பி. தெரிவிப்பு




(கொழும்பு)

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பாரியளவிலான சேதங்கள் ஏற்பட்டிருந்தன எனவும் சேதங்கள் ஏற்படாமல் உலகில் யுத்தம் எதுவும் வெற்றி பெறவில்லை" எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

Indian Express ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஒரு இளைஞராக போர் தொடர்பில் என்ன உணர்கின்றீர்கள் என்பதை விளக்க முடியுமா?" என அந்த ஊடகம் கேள்வியெழுப்பியிருந்தது.

இதற்குப்பதிலளித்த நாமல் "போர் என்பது பொதுவாக ஆண்களால் உருவாக்கப்பட்டு, அதில் பெண்களும் சிறார்களும் கொல்லப்படுகின்றனர். போரை துவங்கிய மக்களுக்கு அதன் முக்கிய நோக்கம் பல நேரங்களில் மறந்து விடுகிறன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக எனது தந்தையால் முன்னெடுக்கப்பட்ட போரானதும் சேதத்தை விளைவித்தது. சேதத்தை விளைவிக்காமல் உலகில் எந்தப் போரும் வென்றதில்லை.

இந்த உலகம் மகிந்தவை ஒரு நல்ல மனிதர் என கொண்டாடியிருக்கலாம். அவர் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

விடுதலைப் புலிகளின் கடத்தலில் சிக்காமல் எங்கள் பெண்கள் தற்போது மரியாதைக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். எங்கள் பிள்ளைகள் ஆயுதம் ஏந்தாமல் இப்போது பாடசாலை செல்கின்றனர்.

ஒரு ஜனாதிபதியின் மகன் என்ற முறையில் இந்த யுத்தம் எனது அன்றாட வாழ்க்கையை கட்டுப்படுத்தியிருக்கிறது. கல்லூரியில் நான் ரக்பி விளையாடியவன்.

பாதுகாப்பு காரணங்களுக்காக நான் பல கல்லூரிகள் மாற வேண்டி இருந்தது. வெளிநாடுகளில் பிரச்சினையை உருவாக்குவது புலம்பெயர்ந்த தமிழர்கள் என நான் நம்பவில்லை.

மாறாக தனிமைப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகளாலேயே பிரச்சினை. லண்டன் உயர் ஆணையம் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இந்திய தமிழையே பேசுகின்றனர். யாழ்ப்பாண தமிழ் அல்ல.

இலங்கை தமிழர்கள் பால் புலம்பெயர் தமிழர்கள் கவலை கொள்கின்றனர் எனில், அவர்கள் இலங்கைக்கு திரும்பி இங்குள்ள தமிழர்களுக்கு உதவ வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மேர்வின் வீட்டு திருமணத்தில் ரணில்- ராஜித









(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவின் திருமணம் கொழும்பில் பிரமாண்டமாக இடம்பெற்றது.

ஈரான் நாட்டின் செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த மணமகளை, மாலக சில்வா கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருமணம் செய்தார்.

திருமண வைபவத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ராஜித சேனாரட்ன உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதமர் மற்றும் ராஜிதவுடன் மேர்வின் நெருக்கமாக உரையாடும் வகையிலான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

# அமெரிக்காவின் மனித உரிமை நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை

(கொழும்பு)

2019 மார்ச் மாதத்துக்குப் பின்னர், இலங்கையை தனது மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலுக்குள் அமெரிக்கா கொண்டு வரும் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் மற்றும் குழுவினர், அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான முதன்மை பிரதி உதவிச் செயலர் அலீஸ் வெல்ஸை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

இதன்போதே, 2019 மார்ச் மாதத்துக்குப் பின்னர், இலங்கையை தனது மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலுக்குள் அமெரிக்கா கொண்டு வரும் என்று அலீஸ் வெல்ஸ் தெரிவித்தார்.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை அமைத்தல் உள்ளிட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1, 34/1 தீர்மானங்களை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இரண்டு ஆண்டு கால அவகாசம் அளிக்கப்பட்டது.

ஒரு ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையிலும், நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்கும் செயற்பாடுகள் மந்தகதியிலேயே இடம்பெறுவதாக, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கடந்த வாரம் கூறியிருந்தார்.

அதேவேளை, 2019 மார்ச் மாதத்துடன் இலங்கைக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடையவுள்ளது.



இந்த நிலையிலேயே 2019 மார்ச் மாதத்துக்குப் பின்னர் இலங்கையை தனது மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலுக்குள் அமெரிக்கா கொண்டு வரும் என்று அமெரிக்கத் தரப்பில் கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## தொணத் தொண மனிதர்கள்!

வாயைத் திறந்தால் சில பேர் மூடுவதே இல்லை. இவர்களைக் குடும்ப உறுப்பினர்களாகவும் நண்பர்களாகவும் பெற்றவர்கள் பாவம் செய்தவர்கள்.

தெரியாத்தனமாக இவர்களிடம் ஒரு கேள்வி கேட்டால் போதும். ஊர்க் கதையையெல்லாம் பேசி அறுத்து விடுவார்கள் அறுத்து. சிலர் எதுவும் கேட்காத நிலையில் கூட தாங்களாக ஆரம்பித்து ராவுராவு என்று ராவி விடுகிறார்கள்.

பிரியம் காரணமாகவும் மனிதாபிமானம் காரணமாகவும் மனம் சங்கடப்படுவார்களே என்றும் பிறர் இவர்களுடைய இம்சையைப் பொறுத்துக் கொள்கிறார்களே தவிர மனத்திற்குள் திட்டுவார்கள்.

அதுமட்டுமல்ல இவர்கள் எதிரே வருகிறார்கள் என்று தெரிந்தாலே வலப்புறத் தெருவிலோ இடப்புறத் தெருவிலோ திரும்பிக் காணாமல் போய் விடுகிறார்கள்.

வேறு வழியில்லாமல் மாட்டிக் கொண்டு விட்டால் இல்லாத பரபரப்பைச் செயற்கையாக உற்பத்தி செய்து கொண்டு எனக்கு ஓர் அவசர வேலை இருக்கிறது என்று சொல்லியபடி ஓடியே போய் விடுகிறார்கள்.

நிறையப் பேசுகிற பெரும்பாலானவர்களிடம் நான் காணும் அதிசய உண்மை இவர்கள் நல்லவர்கள் பெரும்பாலும் வெகுளித்தனம் அதிகம் உதவும் உள்ளம் உள்ளவர்கள். அதேநேரத்தில் கடுஞ் சொல்லைப் பொறுக்காதவர்கள்.

இவ்வளவு நல்ல குணங்கள் இருந்தும் மற்றவர்களால் வெறுக்கப்பட்ட காரணம் இவர்களது லொட லொட லொட வாய் தான். ஒருவர் நிறையப் பேசப் பேசத் தான் எந்த அளவுக்கு விடயமற்றவர்; சரக்கு இல்லாதவர் என்பதைத் தாங்களே அடையாளங்காட்டிக் கொள்கின்றார்கள். காரியக்காரர்கள் அதிகம் பேசுவதில்லை.

எதிராளிக்குக் கேட்கும் ஆர்வம் இருக்கிறதா? அவசியமான விடயம் குறித்துத்தான் பேசிக் கொண்டிருக்கின்றோமோ? மனதில் தோன்றுகின்ற எல்லாவற்றையும் வெளியே பகிர்ந்து கொண்டு தான் ஆக வேண்டும் என்கிற கட்டாயமென்ன? என்றெல்லாம் சில கேள்விகளைத் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டு அவற்றுக்கு விடை கண்டு கொஞ்சமாவது மாற முயற்சி செய்யலாம்.

அவரவர்களுக்கென்று ஏராளமான சொந்தப் பிரச்சினைகள் சுய சோகங்கள் இருக்கின்றன. இதயப் பாத்திரம் இவற்றால் நிரம்பியிருக்கும் போது புதிதாக எதையும் கேட்டுக்கொள்ள மற்றவர்கள் தயாராக இருப்பதில்லை.

நிறையப் பேசப் பேச வேண்டாத பல செய்திகள் வெளியாகி அவை கருக்கொண்டு உருக்கொண்டு நமக்கு எதிராகவே திரும்பி விடுகின்றன.

மண்ணில் திரியும் பிள்ளைப் பூச்சியை எடுத்து மடியில் கட்டிக் கொள்வது எந்த வகையில் புத்திசாலித்தனம்?

**லேனா தமிழ்வாணன்**

# வெறுப்புணர்வு பேச்சுக்களை கட்டுப்படுத்த புதிய சட்டம்

## பிரதமர் ரணில் தகவல்

(கொழும்பு)

இன மற்றும் மத ரீதியான முரண்பாட்டை தடுப்பதற்கு பேச்சு சுதந்திர சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 44ஆவது மாநாடு கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன மற்றும் மத ரீதியான குழப்பங்களை கட்டுப்படுத்த சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் காணப்படும் சட்டங்களை ஒத்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற அமைதியற்ற நிலையை சுட்டிக்காட்டிய பிரதமர், அதன் அடிப்படையிலேயே இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆலோசித்து வருவதாக தெரிவித்தார்.



பேச்சு சுதந்திர சட்டமானது பேச்சு சுதந்திரத்தை கட்டுப்படுத்துமென சிலர் நினைக்கலாம். ஆனால், வெறுப்புணர்வை தூண்டும் வகையிலான பேச்சுக்களையே இச்சட்டம் கட்டுப்படுத்துமென்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, சமூக வலைத்தளங்களில் வெறுப்புணர்வை தூண்டும் பதிவுகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை ஆராய்ந்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.


இவ்விடயங்கள் தொடர்பாக சகல மதத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நீதியரசர்களை அவமதித்தது யார்? மகிந்த அணிக்கு ரஞ்சன் சவால்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஒன்றிணைந்த எதிரணியினரை தன்னுடன் பகிரங்க விவாதம் நடத்த வருமாறு, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க சவால் விடுத்துள்ளார்.

தனது நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறையினர் மீது அவதூறு பரப்பியதாக ரஞ்சன் மீது ஒன்றிணைந்த எதிரணியினர் குற்றஞ்சுமத்தியுள்ளனர். சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் இதுகுறித்து ஒன்றிணைந்த எதிரணியினர் முறையிட்டனர். சபாநாயகர் இவ்விடயம் தொடர்பாக கரிசனை கொள்ள வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் குறிப்பிட்டிருந்தார்.



இந்நிலையில், இவ்வாறு தன்மீது குற்றஞ்சுமத்துபவர்கள் தன்னுடன் நேரடி விவாதத்திற்கு வந்தால் உண்மையில் நீதித்துறையினரை அவமதித்தவர் யாரென்ற உண்மையை வெளிப்படுத்துவேன் என ரஞ்சன் கூறியுள்ளார்.

தன்மீது குற்றஞ்சுமத்துபவர்கள், முன்னர் ஆட்சி நடத்தியபோது நீதித்துறையினரை அவமதித்ததாகவும் அலரி மாளிகையிலேயே தீர்ப்புகள் எழுதப்பட்டதாகவும் ரஞ்சன் கூறியுள்ளார். முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை அவமதித்து பதவி நீக்கியதை மறந்துவிட்டார்கள் என்றும் ரஞ்சன் ராமநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## 'குடு நுவான்' கைக்குண்டுடன் கைது!

(கொழும்பு)

பல்வேறு கொலை, கொள்ளை மற்றும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய "குடு நுவான்" என அறியப்படும் நுவான் குணதிலக்க எனும் பாதாள குழு உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனேமுல்ல பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடு நுவான் கைது செய்யப்படும் போது அவரிடமிருந்து கைக்குண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

குடு நுவான் கம்பஹா, கனேமுல்ல ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் தேடப்பட்டுவந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கை மக்களின் கனவை நிறைவேற்றுவதே நோக்கம்

### அமைச்சர் நிமால் கூறுகிறார்



(கொழும்பு)

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது மாத்திரமின்றி இலங்கை மக்களின் போக்குவரத்து சேவைகளையும், பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதே எமது முக்கிய நோக்கம் என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு விமான நிலையமானது, 25 வருடங்களின் பின்னர், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிவில் விமான சேவைகள் அதிகார சபையிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டு மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் உரையாற்றும் போதே நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

மேலும், இந்த விமான சேவையின் மூலம் சுற்றுலா பயணிகள் நன்மையடைவதுடன், இலங்கை மக்களும் நன்மையடைய வேண்டும் எனவும் இலங்கை மக்களின் விமானத்தில் பறக்க வேண்டும் என்ற கனவை இதன் மூலம் நிவர்த்தி செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சூழல் பாதுகாப்பு மிக முக்கியமானது. விமானங்களை கொள்வனவு செய்ய அதிக பணம் செலவிட்டுள்ளது.

எவ்வாறாயினும் மக்களுக்கு அனுகூலங்களையும், சேவைகளையும் வழங்க தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுப்போம் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 'அழியாச் சுவடுக்கு மொழியால் பாராட்டு'



ஆனைக்கோட்டை, உயரப்புலம் கிராம அபிவிருத்தி சபை மண்டபத்தில் கிராம உத்தியோகத்தர் இரட்ணராஜா தலைமையில் நடைபெற்ற "முதியோர் கௌரவிப்பு" நிகழ்வில் மூத்த எழுத்தாளர் கே.ஆர். டேவிட்டின் இலக்கியப் பணியைப் பாராட்டி அழியாச் சுவடுக்கு மொழியால் பாராட்டு என்ற நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யசோதா, சமூக அலுவலர் சிவராசா ஆகியோர் இணைந்து இக் கௌரவத்தினை வழங்கினர். (இ)

## சீனப் பிரஜை இலங்கையில் கைது


### 2 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்கள் பறிமுதல்

(கொழும்பு)

2 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களை இலங்கைக்கு கொண்டுவந்த, சீனப் பிரஜை ஒருவர், கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை 12.55 மணியளவில் ஹொங்கொங் நகரில் இருந்து இலங்கை வந்த குறித்த நபர், தனது பயணப்பையில் மாணிக்கக் கற்களை மறைத்து வைத்து, எடுத்து வந்துள்ளமையை தெரிந்து, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த நபர் சீனாவை சேர்ந்த 39 வயதுடைய நபர், எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## புதிய மேயர் தெரிவு



(கொழும்பு)

தெஹிவளை - கல்கிஸ்சை மாநகர சபையின் புதிய மேயராக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாவலகே ஸ்டேன்லி டயஸ் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாவலகே ஸ்டேன்லி டயஸுக்கு ஆதரவாக 23 வாக்குகளும் ஐக்கிய தேசிய கட்சியின் சனேத்ரா ரணசிங்கவுக்கு 21 வாக்குகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (இ-7)

# யோகர் சுவாமிகளின் 54 வது குருபூசை இன்று


ஈழமணித் திருநாடு செய்த அருந்தவப்பயனாக அவதரித்த ஈழத்து சித்தர் வரிசையில் தோன்றிய கொழும்புத்துறை தவத்திரு யோகர் சுவாமிகளின் 54ஆவது ஆண்டு குருபூசை தினம் இன்றாகும்

சுவாமிகள் இந்த புனித பூமியில் நடமாடும் தெய்வமாக இருந்து நல்ல அறப்பயிர் விதைகளை எம் மத்தியில் விதைத்து அதை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் அறுவடை செய்து அருள் நெறியில் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல வழிகாட்டி மக்களோடு மக்களாக வாழ்ந்த பெரும் துறவி.

சுவாமிகள் ஈழவள நாட்டின் மாவிட்டபுரம் என்றும் புண்ணிய பதியில் வாழ்ந்த சைவப் பெரியார் அம்பலவாணருக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி வைகாசித்திங்கள் 29ஆம் திகதி அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தார். பெற்றோர் எம் குருநாதருக்கு "யோகநாதன்" என்று திருநாமம் சூட்டினார்.

அக்காலத்தில் மிஷனரிப் பாடசாலைகள் காணப்பட்டதால் இவரது ஆரம் பக் கல்வி யாழ்ப்பாண புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்தார். ஆங்கிலம், தமிழ் போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார்.

அம்பலவாணர் மகனை தன்னுடைய வியாபார நிமித்தம் மலை நாட்டுக்கு கூட்டிச் செல்வது வழக்கம். ஒரு முறை சுவாமிகள் இளைஞனாக இருந்த போது சிவனொளிபாத மலைக்குச் சென்று திரும்பி வந்து தன் தந்தையாருக்கு "இது எல்லாம் உண்மை எனது உடம்பு சிவன் சொத்து" இது எல்லாம் உண்மை என்று கூறினார். இதைக் கேட்ட தந்தையார் மகனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார்.



சுவாமிகள் தனது இளமைக் காலத்தில் அரச உத்தியோகத்தராக வேண்டும் என்று எண்ணி இரணைமடு குளக்கட்டு வேலை ஆரம்பித்த காலத்தில் களஞ்சிய பொறுப்பாளராக வேலை ஏற்றார். தனது ஓய்வு நேரங்களில் தியானம், தேவார திருவாசகம் ஓதுதல் போன்றவற்றில் நாட்டம் செலுத்தினார்.

இவற்றை அவதானித்து வந்த வேலைத்தள பிரதி பொறியியலாளர் பிறவுன் என்பவர் சுவாமிகளைப் பார்த்து நீ கடவுள் போன்றவன் (You are a God man) என்று கூறுவார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் குருநாதன் செல்லப்பா சுவாமிகள் யோகநாதன் என்ற இரும்புத்துண்டை காந்தம் இழுப்பது போல் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாண நல்லூர் தேரடிக்கு இழுத்தார். சுவாமிகள் தன் குருநாதரை முதலில் கண்ட கோலத்தை தனது நற் சிந்தனைப் பாடலில் இவ்வாறு கூறுகின்றார்.

கருத்தில் நினைந் துருகிக் கைகூப்புந் தொண்டர்

வருத்தமெல்லாம் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்

தேரடியிற் றேசிக னைக் கண்டு தெரிசித் தேன்

ஆரடா நீ யென்றான் அவன்.

தேரடியில் தன் குரு நாதரேசி கனை கண்ட பொழுது "ஆரடா நீ, தேரடாவுள், தீரடாபற்று" என்று சீராடியார் சூழ நிற்க உபதேசம் வழங்கப்பட்டு ஆட்கொள்ளப்பட்டார்.

தனது குருநாதன் செல்லப்பா சுவாமிகள் மகாவாக்கியங்களை எப்பொழுதும் தனது நாவினால் முணு முணுத்தவாறு உச்சரித்துக் கொண்டிருப்பார் என்பதை

செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்

பொல்லாப் பிள்ளை யென்றான் போற்று

முழுதும் உண்மை யென்று முனிவனவன் சொன்னான்

எமுத முடியா ததை

நாமறியோமென்னும் அரிய திருவாக்குச்

சேமமுறச் சொன்னான் தெரி

முடிந்த முடிபென்று முன்னாளிற் சொன்னான்

அடியார்கள் முன்னரவன்

என்று பாடலில் கூறுகின்றார். தேவர்களும் முனிவர்களும் ஒளிவு மறைவின்றி வந்து வணங்கும் நல்லூர் தேரடியில் சுவாமிகள் தன் குருநாதருடன் இருக்கும் காட்சியைக் காண அடியவர் கூட்டம் நல்லூர் தேரடியை நாடியது. ஒரு நாள் தன் குருவின் கட்டளைப்படி கதிர்காமம் செல்வதற்காக கிழக்கு நோக்கி புறப்பட்டுச் செல்லும் வழியில் மட்டக்களப்பில் ஒரு முஸ்லிம் மந்திரவாதியும் சுவாமிகளுடன் காட்டுப் பாதை வழியாக நடந்து செல்லும் போது மதம் கொண்ட காட்டெருமைகள் இவர்கள் இருவரையும் நோக்கி வேகமாக வந்து கொண்டிப்பதைக் கண்ட முஸ்லிம் மந்திரவாதி ஓடிச் சென்று மரத்தில் ஏறி விட்டார். ஆனால் சுவாமிகள் தன் இடத்தை விட்டு அகலாது வேகமாக வந்த காட்டெருமைகளை ஒரே பார்வையாகப் பார்த்தார். அவை வந்த வழியே திரும்பிச் சென்று விட்டன.

சுவாமிகளைக் காணாத அடியவர் செல்லப்ப குருமூர்த்தத்திடம் கேட்ட போது "அவன் செத்துப் போய் விட்டான்" என்று கூறினார்.

இவ்வாறு கதிர்காம யாத்திரையை முடித்துக் கொண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்து 1914 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்புத்துறையை தனது இருப்பிடமாகக் கொண்டு தன்னை நாடி வரும் மெய் அன்பர்களின் குறைகளையெல்லாம் தீர்த்து வாழ அருள்காட்டி வாழும் தெய்வமாக விளங்கினார்.

அக்கால கட்டத்தில் நடந்த அற்புதங்களை சுவாமிகளின் அடியவர் அரசாங்க அதிபராக கடமையாற்றிய அமரர் ஸ்ரீகாந்த "நான் கண்ட பெரியார்" என்ற நூலில் விபரித்துள்ளார்.

சுவாமிகள் திருமுறைகளில் கோளறு திருப்பதிகம், இடர்களைப் பதிகம், திருத்தாண்டகம் போன்றவற்றை பண்ணோடு ஓதியும் ஓதுவித்தும் வந்தார். இன்றும் சுவாமிகள் கூறியது போல் தினந்தோறும் நல்லூர்த் தேரடியில் கோளறுபதிகம், நற்சிந்தனைப் பாடல் பாடப்பட்டு வருகின்றது.

எமது மண்ணில் உயிர்க் கொலைகள் உக்கிர கட்டத்தில் இருந்த காலத்தில் அன்பர்கள் சிலர் கூடி இந்த அழிவுக்கு தீர்வு என்ன என்று அறிய இந்தியா வாறநாசிக்குச் சென்று அங்கு உயிருடன் வாழும் தெய்வத்திடம் கேட்பதற்காகச் சென்றார்கள்.'

அங்கே சென்றதும் அதற்கு அவர் உங்கள் ஊரில் யாழ்ப்பாணத்தில் யோகர் என்ற சீமான் நல்ல அறப்பயிரை விதைத்து விட்டுள்ளார். நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி அப்பயிரை நல் முறையில் அறுவடை செய்வீர்கள் என்றால் உங்களுக்கு ஒரு குறையும் வராது என்று கூறி அனுப்பினார்.

இன்று உலகம் பூராகவும் சுவாமிகளின் சீடர்கள் தம் குருநாதன் யோகர் சுவாமிகள் காட்டி வந்த வழியில் அறப்பயிர் விதைத்து சைவ சமய உண்மைகளை உணர்ந்து அறப்பணி ஆற்றி வருகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் அதற்கு உதாரணம். சிவாயநம சுப்பிரமுனி காட்டிய வழியில் ஐரோப்பியர் இன்று எமது சைவ சமய உண்மைகளை அறிந்து. அவற்றைப் பின்பற்றி வருகின்றனர்.

அவ்வாறே எமது சைவ அன்பர்களும் தங்கள் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் எம்மண்ணில் எம்மோடு வாழ்ந்த தவந்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களைப் பாடுவதற்கு வழி அமைத்து கொடுப்பதோடு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் தேரடியில் மாலைப் பூசை முடிவுற்றதும் நடைபெறும் பஜனை நிகழ்வில் தங்கள் குழந்தைகளுடன் பெற்றோர்கள் வந்து கலந்து சிறப்பித்து நல்லைக் குருநாதன் திருத்தாள் வணங்கி பேறு பெறுவோமாக.

"ஒரு பொல்லாப்பும் இல்லை"

செல்லத்துறை லோகேஸ்வரன்
ஆசிரியர் யாழ்.மத்திய கல்லூரி.

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 07

பரமசாமி பஞ்சாட்சரம்

**கயிலாசத்தைத் தரிசித்த நாயன்மார்களும் பெரியார்களும்**

1. காரைக்கால் அம்மையார் (கி.பி. 400)

2. திருநாவுக்கரசு நாயனார் (மருணீக்கியார் கி.பி. 600)

3. சுந்தரமூர்த்தி நாயனார் (நம்பியாரூரர் கி.பி. 700)

4. சேரமான் பெருமாள் நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், ஸ்ரீ ஆதி சங்கரர், அர்ச்சுனன், தருமசேனன், ஔவையார், குபேரன், வாமதேனு, பகீரதன்.

5. இராவணன் (பலமுறை கயிலை சென்று திரும்பி வந்தவர் கிட்டத்தட்ட கி.மு. 4000).

**திருக்கயிலாசத்தில் இருந்து அவதாரமெடுத்தவர்கள்.**

1. ஆலாலசுந்தரர் (சுந்தரமூர்த்தி நாயனார் கி.பி. 700)

2. கமலினி (சங்கிலியார் கி.பி.700)

3. அநிந்திதை (பரவையார் கி.பி.700)

4. சித்தராகிய அகத்திய முனிவர் (கிட்டத்தட்ட கி.மு.4000)

5. சித்தராகிய புலத்திய முனிவர் (கிட்டத்தட்ட கி.மு.4000)

6. மகா சித்தராகிய திருமூலமுனிவர் (கிட்டத்தட்ட கி.மு.4000)

ஆலாலசுந்தரர் திருக்கயிலாசத்தில் சிவனுக்கு நெருங்கிய தொண்டராக விளங்கினார். அவர் அநிந்திதையையும் கமலினியையும் ஒருமுறை பார்த்து மனம் பறிகொடுத்த படியால் அவரைச் சிவபெருமான் மண் உலகத்திற் பிறந்து வாழ்க்கையை அனுபவிக்க அருள் பாலித்தார்.

அவர் தமிழ் நாட்டில் நம்பியாரூரர் ஆகப் பிறந்து மக்கள் துயர் தீர்க்கப் பல அற்புதங்கள் செய்து தேவாரங்கள் பாடிச் சுந்தரமூர்த்தி நாயனாராக வாழ்ந்தவர். பின்பு பரவையாரையும் சங்கிலியாரையும் திருமணம் செய்து வாழ்க்கையை அனுபவித்த பின்னர் அதைத் துறந்து கயிலாசம் அடைந்து சிவபத மெய் தியவராவார்.



கமலினி திருக்கயிலாசத்தில் பார்வதி அம்மனுக்குத் தொண்டு செய்தவர். அவ் வேளையில் சுந்தரரைப் பார்த்து மையலுற்றபடியால் சிவபெருமான் அவரை மண் உலகத்திற் பிறந்து வாழ்க்கையை அனுபவித்து வர அருள் செய்தார். இவர் தமிழ் நாட்டிற் பரவையாராகப் பிறந்து சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையை அனுபவித்த பின் அதைத் துறந்து சிவபத மெய்தியவராவார்.


அநிந்திதை திருக்கையிலாசத்தில் பார்வதி அம்மனுக்குத் தொண்டு செய்தவர். அங்கு சுந்தரரைப் பார்த்து மனம் பறிகொடுத்தபடியால் கமலினி போல் இவரும் இறை அருளால் மண் உலகிற் பிறந்தார். இவர் தமிழ் நாட்டில் சங்கிலியாராகப் பிறந்துசுந்தரமூர்த்திநாயனாரைத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையைஅனுபவித்த பின் அதைத் துறந்து சிவபதமெய்தியவராவார்.

அகத்தியமுனிவர் திருக்கயிலாசத்தில் 18 சித்தர்களில் 2 ஆவது சித்தர். சிவனும் பார்வதியும் கயிலாசத்தில்திருமணம்செய்து கொண்டபோது முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெட்டாயிரம் ரிஷிகளும் பலகோடி மக்களும் அத்திருமணத்தைப் பார்க்கக் கயிலாயத்திற்குச் சென்றனர். அந்தத் திருமணத்திலே பாரதத்தின் வடகோடி சிறிது தாழ்ந்து தென்கோடி உயர்ந்தது. பாரதத்தைச் சமன்படுத்தச் சிவன் அகத்தியரைத் தென்திசைக்குச் செல்லுமாறு கூறினார்.

(தொடரும்)

# பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முஸ்லிம் அமைச்சர்களுக்கு நல்லவாய்ப்பு

## விமலின் கட்சி தூண்டிவிடுகிறது



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முஸ்லிம் அமைச்சர்கள் தங்களுக்கு கிடைத்துள்ள நல்லதொரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள முடியுமென தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் மொஹமட் முஸம்மில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் தெரிவித்தார்.

முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கமிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர், மாற்று அணிகளுக்கு தாவிச் செல்வதற்கு தற்போது மும்முரம் காட்டுகின்றனர். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினால் கையளிக்கப்பட்டுள்ள நமபிக்கையில்லாப்பிரேரணையை, வெற்றி கொள்ள முடியாது என்பதனால்தான், அவ்வாறு மும்முரம் காட்டுகின்றனர்.

"மத்திய வங்கி பிணைமுறி மோசடியை ஏற்காதவர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

அத்துடன் கண்டி நிர்வாக மாவட்டத்தில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களுக்கு, பொலிஸாரின் அசமந்த போக்குதான் காரணமென கூறப்பட்டது. அரசாங்கத்தில் இருக்கும் முஸ்லிம் அமைச்சர்களே, இவ்வாறு குற்றஞ்சாட்டினர். மேற்படி சம்பவங்கள் இடம்பெற்ற வேளையில், சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சராக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே இருந்தார். ஆதலால், அந்தச் சம்பவங்களுக்கு, அவரே பொறுப்புக்கூற வேண்டும்" என்றார். இவ்வாறான நிலையில், பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை, முஸ்லிம் அமைச்சர்கள் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி கொள்ள முடியுமெனக் குறிப்பிட்ட முஸம்மில், பணப்பொதிகளுக்காக அமைதி காப்பதா? அல்லது மக்களுக்காக செயற்படுவதா? என்பதை முஸ்லிம் அமைச்சர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டு மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதி விபத்து

## மூவர் படுகாயம்



(ஏறாவூர்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெவோன் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிள் இரண்டு நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் கடும்காயங்களுக்குள்ளான மூவர் கொட்டகலை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் - நுவரெலியா ஏ -7 பிரதான வீதியில் தலவாக்கலை பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் ஹற்றனிலிருந்து தலவாக்கலை பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளும் பத்தனை டெவோன் பகுதியில் இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின.

தலவாக்கலை பகுதியிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் தவறான பக்கத்தில் செலுத்தியதனாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# தங்கை தாக்கியதில் மூத்த சகோதரி பலி!

(கொழும்பு)

மோதர பகுதியில் சிறிய தங்கை தாக்கியதில் மூத்த சகோதரி ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சகோதரிகளுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உச்சமடையவே இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலில் பலத்த காயமடைந்த மூத்த சகோதரி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார். மோதர வீதி, கொழும்பு 15 பகுதியை சேர்ந்த 56வயதுடையஒருவரேஇவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிறிய தங்கை கைது செய்யப்பட்டுள்ளதுடன் மோதர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டவர் ரணிலை சந்திக்க முஸ்தீபு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, கையளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டவர்களில், நாடாளுமன்ற உறுப்பினரொருவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இரகசியமாக சந்திப்பதற்கு முயற்சித்து வருவதாக தெரிய வருகிறது.

அவ்வாறான சந்திப்புக்கு, அமைச்சர் மலிக் சமர விக்ரம மற்றும் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரின் ஊடாகவே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு முடியாமல் போய்விட்டால், தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வதற்கும் தான் தீர்மானித்துள்ளேன் என, அவ்வமைச்சர்கள் இருவரிடம் அவர் தெரிவித்துள்ளாரென அந்தத் தகவல் தெரிவிக்கின்றது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1368

Search for people, places and things Nagendram Home

## கவி

காதல் என்பது சாணிய மிதிச்ச மாதிரி கழுவுனா போயிடும்...



ஆனா கல்யாணம் என்பது ஆணிய மிதிச்ச மாதிரி... தழும்பு போகவே போகாது!

## காவேரி

அம்மா நான்கு நாட்டுக் கோழி முட்டை வாங்கிட்டு வரச் சொன்னாங்க..



எந்தெந்த நாடுன்னு கேட்டதுக்குப் போய் இங்க உட்கார வச்சுட்டாங்க....

## கண்ணன்

மகளைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டும்தான் தெரியும்....



தன் மருமகன் பாவப்பட்ட ஜென்மம் என்று...


## கம்சன்

முன்பெல்லாம் சொந்தக்காரங்க வீட்டுக்கு வந்தா பசங்கள் எல்லாம் நல்லா இருக்காங்களான்னு கேப்பாங்க...



இப்பலாம் வந்ததும் பட்டை பின் சார்ஜர் இருக்கானு கேட்கிறாங்க....

## காந்தன்



மனைவியின் அற்புதமான சமையலுக்கு கிடைத்த கோப்பை ஆண்களின் தொப்பை

## கஜன்

ஒரு கதவு அடைத்தால் இன்னொரு கதவு திறக்கும் என்கிறார்களே...



அது எதிர்த்த வீடா அல்லது பக்கத்து வீடா என்பதையும் சொல்லியிருக்கலாம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உலக நாடகதினம்-மார்ச் 27

## ஈழத்து அரங்கியலின் இன்றைய போக்கு



இன்றைய இளைய சந்ததியினர் யாவரையும் தன்பால் ஈர்த்து வைத்துள்ள சினிமாவின் அத்திபாரமே நாடகம் என்று கூறுவதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆய கலைகள் அறுபத்து நான்கு இருப்பினும் மனிதனின் உணர்வுகளுக்கு மனிதனே உயிர்கொடுத்து எந்தவொரு விடயத்தையும் ஆழ் மனதில் பதியுமாறு கூறுவதற்கு சிறந்த ஊடகம் நாடகக் கலையென்றால் அது மிகையாகாது.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்களுள் முன்நிற்பது நாடகக் கலை என்று கூறுவது பொருத்தப்பாடுடையதாக அமையும். எழுதப்படுவதும் பண்ணிசைத்துப் பாடப்படுவதுமான இயல், இசை என்பவற்றை வலுச்சேர்ப்பதில் நாடகத்தின் பங்கு அளப்பரியதாக காணப்படுகின்றது. இயல், இசை என்பவற்றிற்கு உயிர் கொடுத்து உடல் அசைவுகளோடு உணர்வு கொடுப்பதனால் அரங்கியலின் வலிமை மிக அதிகம் என்றே கூறவேண்டும்.

கலை என்பது காலத்தின் கண்ணாடியாகும். அந்த வகையில் நாடகக் கலையும் அவ்வவ் காலத்தின் நிகழ்வுகளையும் சமூகத் தேவைகளையும் பிரதிபலிக்கும் வகையில் தனது பங்கினை செவ்வனே ஆற்றி வருகின்றது. எந்தவொரு விடயத்தையும் வெளிப்படையாகவும் எளிதான முறையிலும் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையிலும் எடுத்துரைப்பதில் அரங்கக் கலை மிகவும் சிறந்ததாக விளங்குகின்றது.

நாடகமானது வெறுமனே நடித்துக் காட்டுவதோடு மட்டும் நின்றுவிடுகின்றதொரு துறையாக மட்டுமன்றி பல்வேறு நபர்களுக்கிடையில் அன்பையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்துகின்றது.

மேலும் நம் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்ததாக அரங்கியல் செயற்பாடுகள் காணப்படுகின்றன. சமூகப் பிரச்சினைகள் பலவற்றை வெளிக்கொணர மனித உணர்வுகளின் உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொணரவும் நல்ல பல மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கும் சிறந்த ஊடகமாக நாடகங்கள் திகழ்கின்றன.

ஈழத்து அரங்க வளர்ச்சியானது பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வளர்ந்து கொண்டிருக்கின்றது. மரபரங்குகளில் ஆரம்பித்து நவீன நாடக அரங்கில் கால் பதித்து வளர்ச்சி கண்டு செல்கின்ற போதிலும் இன்றும் அரங்கானது இன்னோரன்ன சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டே இருப்பது அரங்கியலின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவே உள்ளது. அந்தவகையில் இன்று ஈழத்து அரங்கியல் எதிர்கொள்கின்ற முக்கிய சவால்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.

❖ அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடும் அரங்கியலாளர்கள் சமூகத்தில் தாழ்ந்தவர்களாக கருதப்படுவதனால் அரங்கியலாளர்கள் சுதந்திரமாக அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபட முடியாமை.

❖ அரங்கியலுக்கென விசேடமான கொள்கைகள், திட்டங்கள் என்பன முன்வைக்கப்படாமை காரணமாக அரங்கியல் செயற்பாடுகளில் நிலையான தன்மை கேள்விக்குறியாகியுள்ளமை.

❖ நாடக மன்றங்கள் மற்றும் கலைஞர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் காரணமாக அனைத்து அரங்கக் கலைஞர்களும் ஒன்றிணைந்து செயற்படும் தன்மை காணப்படாமை.

❖ தொழில்நுட்பம் மற்றும் சினிமாவின் மோகம் என்பன இளையோர் அரங்கியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை நலிவடையச் செய்துள்ளமை.

❖ முழுமையாக அரங்கியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் போதியளவு பொருளாதாரத்தைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ளமை.

❖ தொழில்முறையாக அரங்கியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான போதியளவு வசதி வாய்ப்புக்கள் காணப்படாமை.

❖ மேலைத்தேய கலைகளுக்கு அடிமையாகிவிட்ட எம் மக்கள் எமது கலைகளை நுகரவும் அதனை வளர்ப்பதற்கும் முன்வராமை.

❖ அரங்கியல் சார் பயிற்சிகளை முறையாகவும் வினைத்திறனாகவும் வழங்குவதற்கு போதியளவு அரங்கியல் நிறுவனங்களும் அரங்கியல் சார் வல்லுநர்களும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை.

❖ அதிகரித்துச் செல்லும் புதிய புதிய அரங்கக் குழுக்களின் உருவாக்கம், அவர்கள் தம் ஆற்றுகைகளின் நேர்த்தியின்மை, கலைத்துவமற்ற தன்மை என்பன மக்கள் மனதில் அரங்கியல் சார் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தல்

போன்ற மேற்கூறிய பல்வேறுபட்ட காரணங்களால் ஈழத்து நாடகக் கலையானது நலிவடைந்து செல்கின்றமை மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகவுள்ளது. எனவே சவால்களுக்கு மத்தியிலும் ஈழத்து அரங்கியலை வளர்ப்பதற்கு கலைஞர்கள், நாடக மன்றங்கள், நாடக ஆர்வலர்கள் முன்வரவேண்டும். அது மட்டுமன்றி கலைகளையும் கலைக்காக வாழும் கலைஞர்களுக்கும் மதிப்பளித்து அரங்கியலை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு ஒவ்வொரு தனிமனிதனும் முன்வருதல் காலத்தின் தேவையாகும்.

வெறுமனே கலாசார விழாக்களில் மட்டும் நாடகங்கள் அரங்கேற்றப்படுவதோடு நின்று விடாமல் ஆலய விழாக்கள், சமூக நிறுவனங்களின் விழாக்கள், விசேட தினங்கள் என்பனவற்றிலும் பிரதேச ரீதியாக மாதாந்தம் நாடக விழாக்கள் ஒழுங்கமைக்கப்பட்டு அரங்கேற்றப்படுதல் அவசியமாகும்.

மேலும் நாடக மன்றங்களுக்கிடையில் மாதாந்தம் நாடகப் போட்டிகளை நடத்துவதோடு அரங்கியல்சார் அடிப்படைப் பயிற்சிகளை பாடசாலை மட்டங்களிலேயே முறையாக வழங்குதல் அரங்கியலில் எதிர்கால வளர்ச்சிக்கு பலமாக அமையும்.

உலகமொரு நாடக மேடை என்பது உலகறிந்த கூற்று. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் பல்வேறு வகிபாகங்களை வகிப்பது தவிர்க்க முடியாததாகும். நாடகம் வாழ்க்கையை வெளிப்படுத்துவதையும், பிரதிநிதித்துவப்படுத்துத்துவதையும் வாழ்வியலுக்கு வழிகாட்டுவதையும் உயர் பணியாகக் கொண்டிருக்கும் எனக் கூறிய ஈழத்து சிறுவர் நாடகத்தின் முன்னோடியான குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் கூற்றினை உற்று நோக்கும் போது நாடகம் வாழ்வியலைப் பேசுவதோடு மட்டும் நின்று விடாமல் வாழ்வியலுக்கு வழிகாட்டுகின்றது என்பதையும் நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது. இதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வதனூடாக அரங்கியலின் அவசியத்தை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

நாடக தினத்தை அனுஷ்டிப்பதால் மட்டும் அரங்கியல் வளர்ச்சியடைந்து விடப் போவதில்லை. அரங்கியலின் இன்றைய நிலை உணர்ந்து அதற்கேற்ப செயற்படுதல் அவசியமாகும். மரபரங்குகள் பேணப்படுதல் அவசியமானதாக இருப்பினும் நவீன அரங்கின் தேவையறிந்து புதிய அரங்க நுட்பங்கள் உள்வாங்கப்படுவதன் மூலமே அரங்கியலை இன்றைய தலைமுறையினரின் இரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள முடிவதோடு அரங்கியலை தொழில்முறையாக மேற்கொள்வதற்கும் வலுப்படுத்திக் கொள்ள முடியும்.

மனித உணர்வுகளுக்கு மனிதனே உயிர்கொடுக்கும் உன்னத கலையான நாடகக் கலையின் பங்கு என்பது எமது சமூகத்திற்கு எப்போதும் தேவையானதொரு கலையாகவே காணப்படுகின்றது.

யுத்தம் முடிவுற்ற பின்னரான எமது சமூகங்கள் பல சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளமை யாவரும் அறிந்த விடயமே! சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் வன்புணர்வுகள், இளவயதுத் திருமணங்கள், பால் நிலை அடக்கு முறைகள், மதுபாவனை, தொழிலாளர் சுரண்டல்கள், வாள்வெட்டுக் கலாசாரம், தற்கொலைகள் என்பன மலிந்து கிடக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், இவற்றுக்கெதிராக செயற்படவும், இப்பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களை வலுவூட்டவும் அரங்கியல் செயற்பாடுகள் ஆணிவேராக அமைகின்றன.

கலைகளின் சிகரமாய் திகழும் நாடகக் கலையானது காலத்தின் கண்ணோட்டத்தை பறைசாற்றி நவீன அரங்கில் பல நல்ல மாற்றங்களை உள்வாங்கி தொழில் முறைக் கலையாக வளர்ச்சிபெற்று நீடித்து நிலைத்திருப்பதற்கு அரங்கியலாளர்கள், அரங்கியல் வல்லுநர்கள், நாடக ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதனூடாக ஈழத்து அரங்கியலின் வளர்ச்சி என்பது சமூகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதாக நல்லதோர் வளர்ச்சிப் பாதையை நோக்கி வளர்ச்சியடைந்து செல்லும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

வ.றொபின்சன், ஆற்றுகையாளர்
செம்முகம் ஆற்றுகைக்குழு (நீர்வேலி)



யாழ். சின்மயா மிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ இராமபிரான் அவதரித்த தினத்தை முன்னிட்டு ஸ்ரீ இராம நவமி கொண்டாடப்பட்ட போது.. . (படங்கள்:ஐ. சிவசாந்தன்)

# வவுனியா கூட்டுறவு கல்லூரி கட்டடத்தை இராணுவத்திடமிருந்து விடுவிக்க வேண்டும்

## வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் வலியுறுத்து

(பனிக்கன்குளம்)

இராணுவத்தினரின் வசமுள்ள வவுனியா கூட்டுறவு கல்லூரி கட்டடத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண கூட்டுறவு மற்றும் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.



வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கூட்டுறவுக்கல்லூரியின் கட்டடம் புனர்வாழ்வு முகாமாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன் காரணமாக கூட்டுறவுக் கல்லூரி வேறு இடத்தில் தற்காலிகமாக இயங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே வவுனியா மாவட்டத்தின் கூட்டுறவு மேம்பாட்டை நோக்கமாக கொண்டு உடனடியாக அக்கட்டடத்தை கூட்டுறவு அமைச்சிடம் ஒப்படைக்க ஆவன செய்ய வேண்டும் என தெரிவித்தார். (2-281)

# வவுனியா மாவட்ட செயலகத்தில் பௌத்த விகாரை அமைக்கும் வேலைத்திட்டம் முதலமைச்சரின் தீர்மானத்தையடுத்து நிறுத்தும்



(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தீர்மானத்தையடுத்து வவுனியா மாவட்ட செயலகத்தில் அமையப் பெறவிருந்த பௌத்த விகாரை வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட செயலகத்தில் பண்டாரவன்னியன் சிலைக்கு பின்புறமாகவும் செயலகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாகவும் பௌத்த கட்டடக்கலையை பிரதிபலித்து முப்படையினரின் அனுசரணையில் சர்வமதத்தலமொன்றை அமைக்க முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் அரசாங்க அதிபருடன் தொலைபேசியில் கலந்துரையாடி தமிழ் மக்கள் அதிகமாக உள்ள பிரதேசத்தில் சர்ச்சைக்கு மத்தியில் இவ்வாறான வழிபாட்டு தலத்தை அமைப்பதை உடன் நிறுத்தி பிரதேசத்தின் ஒற்றுமைக்கு வழிசமைக்குமாறு கேட்டிருந்தார். அவ்வாறு அமைக்க வேண்டிய தேவையேற்படின் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துரையாடுவோம் என வேண்டுகொள் விடுத்தார். இதன் அடிப்படையில் இவ்வேலைத்திட்டத்தினை நிறுத்துவதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன்.வவுனியா மாவட்ட செயலகத்தில் சர்வமதத்தலம் தேவையா? என கேள்விகளை எழுப்பினர். இதன் போது சபை அமர்வில் இருந்த அனைத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்து கேள்வி எழுப்பினார்கள்.

இதனையடுத்து வவுனியா மா்வட்ட செயலகத்தில் சர்வமதத்தலம் தேவையா? என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் வினவிய போது நாங்கள் பலருடன் கலந்துரையாடியே சர்வமதத்தலம் கட்டுவதற்குரிய தீர்மானத்தினை மேற்கொண்டிருந்தோம். அது தேவையில்லை என்றால் அந்தத் திட்டத்தை கைவிடுவதாக தெரிவித்தார்.

அதனையடுத்து முதலமைச்சர் இத் திட்டத்தை கைவிடுமாறு தீர்மானத்தை தெரிவித்திருந்தார்.(2-281)




# அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணியை மீட்டுத் தாருங்கள்

## முல்லை.மாவட்ட அரசாங்க அதிபரிடம் உறவுகள் மகஜர் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணி இராணுவத்தினருக்கு வழங்க வேண்டாம்அங்குஒரு ஏக்கர்காணியை ஒருவர் வாங்கி இடம்பெறும் அபிவிருத்திகளை நிறுத்துங்கள் இதேவேளை இராணுவத்தால் முன்னெடுக்கப்படும் பயிர்ச்செய்கையையும் நிறுத்துமாறும் இராணுவம் எமது பிள்ளைகளுக்குமேல் கிரிக்கெட் விளையாடுவதையும் நிறுத்துங்கள். எமது துயிலுமில்ல காணி 9 ஏக்கரையும் மீட்டு இம்முறை மாவீரர் நாளுக்கு விளக்கேற்ற ஏற்பாடு செய்து தாருங்கள் எனக் கூறி சுமார் 600 இற்கு மேற்பட்ட உறவுகள் கையெழுத்திட்டு முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றை நேற்று கையளித்துள்ளனர்.



களத்தில் போராடி வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட இடங்களில் ஒன்றாகிய முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லம் அமைந்திருந்த காணியில் ஒரு பகுதியை நிரந்தரமாக இராணுவம் கையகப்படுத்த முயல்வதாகவும் 'இதனை இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்கு நோட்டிஸ் ஒட்டப்பட்டதாகவும் இந்த காணி இராணுவத்துக்கு வழங்க முடியாது எனவும் அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணி ஒன்பது ஏக்கரில் ஒரு ஏக்கர் காணியை பொது மகன் பெற்று அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டு வருகின்றார். மிகுதி காணியில் இராணுவம் பப்பாசி செய்கை மேற்கொள்வதோடு விவசாயம் செய்வதாகவும் எமது உறவுகளுக்குமேல் நின்று கிரிக்கெட் விளையாடுவதாகவும் மற்றுமொரு பகுதியில் கன்ரின் நடத்துவதாகவும் இவற்றை எல்லாம் நிறுத்தி எமது உறவுகளுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்த குறித்த காணியை மீட்டுத் தருமாறு கோரினர்.

இம்முறை மாவீரர் நாளுக்கு முன்னர் எமது துயிலுமில்ல காணியை மீட்டு உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த ஆவன செய்யுமாறு கண்ணீர் மல்க கோரி மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜரை கையளித்தனர். மகஜரைப் பெற்றுக் கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் இதுதொடர்பில் உரியவர்களிடம் தெரிவிப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். இத்தோடு இந்த கடிதத்தின் பிரதிகளை ஜனாதிபதி மனிதவுரிமைகள் பேரவை, ஜெனிவா பாராளுமன்ற உறுப்பினர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும் உறவுகள் தெரிவித்தனர். (2-281)

# பத்தாயிரம் கையெழுத்துக்கள் அடங்கிய கருணைமனு

## சுதாகரனின் பிள்ளைகளினால் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க கையளிப்பு

(கண்டாவளை)

கடந்த பத்து வருடாங் களுக்கு மேலாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக் கோரி கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களால் பெறப்பட்ட பத்தாயிரம் கையெழுத்துக்கள்அடங்கிய கருணை மனு நேற்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். பிருந்தாகரனிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைப்பதற்காக ஆனந்தசுதாகரின் பிள்ளைகளினால் கையளிக்கப்பட்டது.



கதிகலங்கி தவிக்கும் பிள்ளைகளுக்குஆதரவுவேண்டியும் அவர்களது தந்தையை கருணை அடிப்படையில் விடுதலை செய்யக்கோரியும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இருபதுக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் கையெழுத்திட்டுமேற்கொண்ட இப்போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி கிளையும் பூரண ஆதரவை வழங்கியிருந்தது.

கிளிநொச்சி வர்த்தக சங்கம், கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகம், கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள்குழு, கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனம், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியம், இந்து ஆலயங்களின் ஒன்றியம், இந்து கலாசார பேரவை, வலுவூட்டப்பட்ட பெண்களின் வலையமைப்பு என்பனவும் இணைந்து பேராதரவை வழங்கியிருந்தன.

இந் நிலையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட மனுவின் பிரதிகள் அமெரிக்க, பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகளின் துாதரங்களுக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் மற்றும், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (2-315-281-312)

# 11 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன இன்னும் 7ஆயிரத்து 500 வீடுகள் தேவை

## வவுனியா மா்வட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்திற்கு 11ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 7 ஆயிரத்து 500 வீடுகள் தேவை என பிரதேச செயலாளர்கள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வா. கிருபாசுதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் வீட்டுத்திட்டம் தொடர்பாக வடக்குமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் வவுனியா மாவட்ட அபிவிருத்திகுழு கூட்டத்தில் நேற்று கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்திற்கான வீட்டுத்திட்ட தேவைகள் அதிகமாக காணப்படுகின்றன. இவ் விடயங்கள் தொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சு, தேசிய நல்லிணக்க அமைச்சு என்பவற்றுக்கு மாவட்ட செயலகத்தின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளோம் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், 50ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பாக கேள்விப்பத்திரம் தற்போது திறக்கப்பட்டுள்ளது. சுமார் 12 ஒப்பந்தக்காரர்கள் இவ்விடயத்திற்கு பத்திரங்களை வழங்கியிருந்தனர். அவை சரிவந்ததும் அனைத்து பிரதேசத்தில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கும் என தெரிவித்துள்ளார். (2-281)




# ஒற்றுமை, வேற்றுமை



ஒரு கோவில் கோபுரத்தில் சில நீல நிறப் புறாக்களும் சில வெள்ளை நிறப் புறாக்களும் வாழ்ந்து வந்தன. நீலப் புறாக்கள் தாம் வெள்ளைப் புறாக்களை விட அழகாக இருப்பதாக எண்ணி கர்வத்துடன் இருந்தன. சிலநாட்களின் பின் அக் கோபுரத்தில் திருத்த வேலைகள் ஆரம்பமாகின.

அதனால் எல்லாப் புறாக்களுக்கும் கோபுரத்தை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. புறாக்கள் எல்லாம் வேறொரு இடம் தேடி ஒரே திசையில் பறந்து சென்றன. அவைகள் பறந்து செல்லும் போது ஓரிடத்தில் வெயிலில் உலர்வதற்காக பரப்பப்பட்ட நெற்களைக் கண்டன. கண்டதும் அனைத்தும் ஒன்றாக அவ்விடத்திற்கு பறந்து சென்று காயப்போடப்பட்ட நெற்களை தின்று தீர்த்து விட்டு அருகே இருந்த ஒரு பெரிய மரம் ஒன்றில் அமர்ந்தன.

தானியத்தை காய்வதற்காக பரப்பி விட்டு சென்ற வேடன் திரும்பி வந்து பார்த்த பொழுது தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான். தானியங்கள் காயப்போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதை பார்த்து வேடன்என்ன நடந்தது என்பதை ஊகித்தான்.

நாளைக்கு இந்த புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் வலை ஒன்றைத் தயார் செய்து அந்த இடத்தில் விரித்து தானியங்களையும் போட்டு புறாக்கள் வரும்வரை காத்திருந்தான்.

அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. சில மணித்துளிகளில் அதன் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன.

சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையினால் எல்லாப் புறாக்களும் ஒன்றாக இறக்கையை விரித்து பறக்க ஆரம்பித்தன. வலையையும் புறாக்கள் தூக்கிக் கொண்டு உயரப் பறந்து சென்றன. இதனைக் கண்ட வேடன், "அய்யய்யோ! புறாக்கள்போனாலும் பரவாயில்லை நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே!" என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான்.

பறந்து செல்லும் போதே, அதில் இருந்த நீலப் புறாக்கள் கர்வத்தோடு, "எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்து பறக்கவில்லை என்றால் அவ்வளவுதான்" என்று கூறின. உடனே வெள்ளை நிறப் புறாக்களும் தம் பங்குக்கு, "நாங்கள் தான் வலிமையோடு பறந்தோம். உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது" என்று கூறிக் கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்தன. வீண் கர்வத்தினால் சண்டையிட்டுக் கொண்டு பறந்ததினால் அவற்றின் பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்தது. அதனால் அவை ஒரு மரக்கிளையில் வலையுடன் சிக்கிக் கொண்டது.

இதனைப்பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கேற்ப இப்புறாக்கள் தப்பி விடுமோ என்று பயந்தேன். நல்லவேளையாக அவற்றின் "ஒற்றுமை நீங்கியதால் அனைவருக்கும் தாழ்வு" என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி" என்று புறாக்களைப் பார்த்து கூறிக் கொண்டே அவைகளை பிடித்து தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.




- ❖1513 - நாடுகாண் பயணி ஜுவான் பொன்ஸ் டி லெயோன் வட அமெரிக்காவைக் (புளோரிடா) கண்ணுற்றார்.
- ❖1854-கிரிமியாப் போர்: ஐக்கிய இராச்சியம் ரஷ்யா மீது போரை அறிவித்தது.
- ❖1890-கென்டக்கியில் லூயிஸ்வில் என்ற இடத்தில் சூறாவளி தாக்கியதில் 76 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖1958-நிக்கிட்டா குருஷேவ் சோவியத் பிரதமர் ஆனார்.
- ❖1964-அமெரிக்க சரித்திரத்தில் அதி சக்தி வாய்ந்த 9.2 ரிக்டர் நிலநடுக்கம் அலாஸ்காவில் இடம்பெற்றதில் 125 பேர் கொல்லப்பட்டனர். அன்கரேஜ் என்ற நகரத்தின் பெரும் பகுதி சேதமுற்றது.
- ❖1968-விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர் சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டார்.
- ❖1969-நாசாவின் மரைனர் 7 என்ற ஆளில்லா தானியங்கி விண்கலம் செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 1970 - கொன்கோர்ட் விமானம் தனது முதலாவது சுப்பர்சோனிக் பயணத்தை மேற்கொண்டது.
- ❖1977-இரண்டு பயணிகள் விமானங்கள் கனாறி தீவுகளில் மோதிக் கொண்டதில் 583 பயணிகள் பலியாகினர்.
- ❖1980-நோர்வேயின் எண்ணெய்த் தாங்கி ஒன்று வட கடலில் விபத்துக்குள்ளாகியதில் 123 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖1993-ஜியாங் செமின் மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதியானார்.
- ❖1994-அலபாமாவில் சூறாவளி தாக்கியதில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- ❖347-ஜெரோம், உரோமை ஆயர், இறையியலாளர், மொழிபெயர்ப்பாளர் (இ. 420)
- ❖1845-வில்லெம் ரோண்ட்கன், நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (இ. 1923)
- ❖1886-லுட்விக் மீஸ் வான் டெர் ரோ, செருமானிய-அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (இ. 1969)
- ❖1892-சுவாமி விபுலானந்தர், யாழ்.நூல் எழுதிய ஈழத்து எழுத்தாளர், கவிஞர், இறையியலாளர் (இ. 1947)
- ❖1910-அய் ஜிங், சீனக் கவிஞர், எழுத்தாளர் (இ. 1996)
- ❖1948-எம். கே. முருகானந்தன், ஈழத்து எழுத்தாளர்
- ❖1955-மரியானோ ரஜோய், எசுப்பானியாவின் பிரதமர்
- ❖1955-முல்லையூரான், ஈழத்துக் கவிஞர், எழுத்தாளர் (இ. 2006)
- ❖1963-குவெண்டின் டேரண்டினோ, அமெரிக்கத் திரைப்பட இயக்குநர்
- ❖1985-ராம் சரண், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

**இறப்புகள்**

- ❖1378-பதினோராம் கிரகோரி (திருத் தந்தை) (பி. 1336)
- ❖1898-சையது அகமது கான், இந்திய மெய்யியலாளர், செயற்பாட்டாளர் (பி. 1817)
- ❖1968-யூரி ககாரின், உருசிய விண்வெளி வீரர் (பி. 1934)

**சிறப்பு நாள்**

- ❖உலக அரங்க நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 45 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 40 | 60 | 60 | 60 |
| தக்காளி | 30 | 40 | 20 | 40 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 25 | 50 | 40 | 40 |
| கோவா | 20 | 30 | 30 | 60 | 60 | 50 |
| கரட் | 60 | 80 | 80 | 80 | 160 | 70 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 30 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 35 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 120 | 160 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 60 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 140 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 55 | 80 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | – | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 40 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 | 160 | 200 | 120 |
| பீற்றூட் | 20 | 30 | 30 | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 50 | 60 | 50 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 420 | 400 | 600 | 500 |
| போஞ்சி | 120 | 160 | 60 | 80 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | – | 60 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 140 | 100 | 80 | 140 | 80 |
| தேங்காய்(ஒன்று) | 100 | 100 | 30-90 | 90 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 160 | 120 | 150 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 120 | – | 120 | 160 | 100 |
| முள்ளங்கி | 30 | 100 | 30 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 50 | – | 60 | 80 | 80 |

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்.
திருநீல கண்டத்து குயவனார்க்கடியேன்.
~ சுந்தரமூர்த்தி நாயனார்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துரோகி என்ற வாயால் தோழா என்று பாடுக

*(சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் சிவப்பரம் பொருளுக்கும் நடந்த சம்பாசணைபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி (ஈபிடிபி)க்குமிடையில் உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் சம்பாசணை நடந்தால், எப்படியிருக்கும் என்று கற்பனை செய்தோம்.' அந்தக் கற்பனையை நீங்களும் படித்தறிக)*

சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு அனை வரும் அறிந்ததே.

திருமண மண்டபத்தில் வைத்து சுந்தரர் தன் அடிமை என்று கூறிய வேதியரைப் பித்தா என்றார் சுந்தரர்.

வந்திருப்பது வேதியர் அல்ல சிவனே என்றறிந்தபோது, சுந்தரர் வேதனையுற்றார். சுவாமி தங்களைப் பித்தா என்று செப்பிவிட்டேனே என்று விம்மி அழுதார்.

சுந்தரரின் பரிதாபம் கண்ட சிவன் அசரீரியாக சுந்தரா! பித்தா! என்ற வாயால் என்னைப் புகழ்ந்து பாடு என்றார்.

இது அன்று நடந்த சம்பவம். இன்று தமிழ் அரசியலில் என்ன நடக்கிறது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை தமிழினத்தின் துரோகி என்று தமிழரசுக் கட்சி கூறி வந்தது.

தமிழரசுக் கட்சிக்கு ஆதரவான ஊடகங்கள் அதனை முதன்மைப்படுத்திப் பிரசுரித்தன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாண மாநகர சபை, சாவகச்சேரி நகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றும் ஆசையில் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியை தமிழரசுக் கட்சி நாடியது.

இதோ சம்பாசணை *(கற்பனை)*

**சேனாதி:** ஐயா! நீங்கள் உதவி செய்தால்; ஆதரவு தந்தால் நாங்கள் யாழ். மாநகர சபையிலும் சாவகச்சேரி நகர சபையிலும் ஆட்சியைக் கைப்பற்றுவோம்.

**தேவா:** தமிழரசுக் கட்சியின் தலைவர்களே! நீங்கள் என்னைத் துரோகி என்றீர்கள். என் கட்சிக்காரர்களை ஈபிடிபி என்று வெறுப்பாகப் பேசினீர்கள். இதன் பின் எப்படி உங்களை நாம் ஆதரிக்க முடியும்.

**சேனாதி:** ஐயனே! மன்னித்தருள்க. காலசூழ்நிலை அப்படியாகச் செய்துவிட்டது. இப்போது அதற்காக நாம் என்ன செய்ய வேண்டுமோ அதனைச் செய்கிறோம்.

**தேவா:** அப்படியா! துரோகி என்ற வாயால் தோழர் என்று பாடுக.

**சேனாதி:** ஐயனே! ஒருமுறையல்ல பலமுறை பாடுவோம்.

*தோழர் எனும் நாமம் கொண்ட தேவா!*
*நமக்குத் தேவை எனும் போது ஆதரவு தரும் நாதா...*
*அன்று பித்தா என்ற பிழை போல்*
*இன்று நாம் செய்த பிழை பொறுத்தருளி*
*யாழ். மாநகர சபை முதல்வர் பதவி*
*நமக்கே ஆக தந்திடுக தேவா*
*நின் ஆதரவைத் தந்திடுக நாதா.*

**தேவா:** நல்லம் நல்லம். தந்தோம். தந்தது தெரியாமல் தந்தோம். நம் ஆதரவு உமக்கே என்பது மக்களுக்குப் புரியாமல் தந்தோம். ஆதரவு பெற்றிடுக நம் அன்பன் சட்டத்தரணி போட்டியிட்டே உன்னவரை முதல்வர் ஆக்குவார். காப்பார். அருள் தருவார்.

# கண்டி சம்பவத்துடன் ஹெல உறுமயவின் பிக்குமாருக்குத் தொடர்பில்லை

## அமைச்சர் சம்பிக்க நிராகரிப்பு

(கொழும்பு)

கண்டியில் சில பிரதேசங்களில் அண்மையில் நடந்த வன்முறை சம்பவங்களுடன் ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த பிக்குமார் எவருக்கும் தொடர்பில்லை என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் அப்படி தொடர்பிருப்பதாக ஒப்புவிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

ஜாதிக ஹெல உறுமய எதிர்காலத்தில் நாட்டின் தேசிய உரிமைக்காகவும் நாட்டின் சமூக அமைதிக்காகவும் தொடர்ந்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

சிலர் இந்த சம்பவங்களுடன் பழைய சம்பவங்களை கோர்க்க முயற்சித்தனர். பேருவளை, மானெல்ல உள்ளிட்ட பிரதேசங்களில் கடந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களுடன் கண்டி சம்பவத்தை தொடர்புபடுத்த முயற்சித்தனர்.

எனினும் அந்த சம்பவங்கள் எவற்றிலும் எமக்குத் தொடர்பில்லை. எனினும் அந்த சம்பவங்களின் பின்னர் விகாரைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது நாங்கள் அங்கு சென்று அவற்றை மறுசீரமைக்க உதவியதுடன் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தோம்.

அதனை விடுத்து பேருவளை சம்பவங்கள் உள்ளிட்ட சம்பவங்களில் எங்கள் கட்சியினர் எவரும் சம்பந்தபடவும் இல்லை. எதிர்காலத்திலும் அப்படியான சம்பவங்களில் சம்பந்தப்படவும் மாட்டார்கள்.

ஆனால் பயங்கரவாதிகளுக்கு எதிராக நாங்கள் அகிம்சை வழியில் போராடினோமே தவிர எந்த சந்தர்ப்பத்திலும் ஆயுதங்களை கையில் எடுத்து வன்முறைகளில் ஈடுபடவில்லை.

அரசாங்கத்தின் செலவில் ஆயுதக் குழுக்களை வைத்துக்கொண்டு கொலைகளை செய்தவர்கள், அண்மைய கால சம்பவங்களை வேறு தரப்பினர் மீது சுமத்தி விட்டு தமது இரத்த கறை படிந்த ஆடைகளுக்கு மேல் சில் துணிகளை அணிந்து தாம் குற்றமற்றவர்கள் என காண்பிக்க முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மிக் விமானக் கொள்வனவுடன் தொடர்புடைய இடைத்தரகு நிறுவனம் லண்டனில் இல்லை

## நீதிமன்றத்திற்கு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்கு 4 மிக் விமானங்களைக் கொள்வனவு செய்த போது இடைத்தரகு நிறுவனமாக செயற்பட்டதாகக் கூறப்படும் நிறு வனம் பிரித்தானியாவின் லண்டன் நகரில் இல்லை எனத் தெரியவருகிறது.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் இதனை அண்மையில் நீதிமன்றத்தில் தெரியப்படுத்தியுள்ளனர். இந்த கொடுக்கல், வாங்கல் ஊடாக 150 கோடியே 88 இலட்சத்து 58 ஆயிரத்து 320 ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

சர்வதேச நிறுவனம் ஒன்றுடன் ஏற்படுத்தி கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய கடந்த 2006ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க இந்த வழக்கில் ஒரு குற்றவாளியாவார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான விபரங்கள் விசாரணையாளர்களால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு அமைய 4 மிக் விமானங்களை கொள்வனவு செய்வதற்காக ஒரு கோடியே 50 இலட்சத்து 65 ஆயிரத்து 437 அமெரிக்க டொலர்களை இலங்கை விமானப் படை போலி மிசா ஹோல்டிங் என்ற நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளது.

இந்த கொடுக்கல் வாங்கலுடன் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தொடர்புள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், வெளிநாட்டில் இருந்தவாறு அறிக்கைகளை வெளியிட்டு வரும் உதயங்க வீரதுங்க, தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் எனவும் மிக் விமான கொடுக்கல் வாங்கல்கள் சட்டரீதியானது எனவும் கூறி வருகிறார் என்பதுகுறிப்பிடத்தக்கது (இ-7)

# பேருந்து விபத்து 20 பேர் படுகாயம்

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை நாவலப்பிட்டி பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 20 பேர் படுகாயமடைந்து கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நாவலப்பிட்டி பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு தலவாக்கலை பகுதியை நோக்கி சென்ற தனியார் பேருந்து ஒன்று பத்தனை மவுண்ட் வேர்ணன் பகுதியில் மண்மேடில மோதி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (ம)

# சீனா சென்ற ஐ.தே.கவினர் நாடு திரும்ப பிரதமர் உத்தரவு

சீனா சென்ற ஐ.தே.கட்சியின் எம்.பிக்களை நாடு திரும்புமாறு உத்தரவிட்ட பிரதமர் சீனாவுக்கு ஆய்வு சுற்றுலா பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்வரும் முதலாம் திகதி நாடு திரும்ப அறிவிக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை முன்கூட்டியே தயார்படுத்தும் நடவடிக்கையாக பிரதமர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆறு உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீனாவிற்கு விஜயம் செய்துள்ளனர்.

சீனா சென்றுள்ள இவர்கள் எதிர்வரும் எப்ரல் 3 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளனர். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஸ்டோர் ரூம் அமைக்கவேண்டிய இடம் எது?**

ஈசானிய ஸ்டோர் ரூம்: பொருள் சேராது

நைருதி கிளையில் ஸ்டோர் ரூம்: வளர்ச்சி

ஆக்நேயத்தின் வடக்கு: உயர்ந்த பலன்கள்

வடக்கே ஸ்டோர் ரூம்: செல்வம் குன்றும்

தெற்கு, மேற்குகளில் ஸ்டோர் ரூம்: நன்மை

*(தொடரும்)*

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதை விழிப்படையச் செய்து எழுந்திருக்கச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு கடமையும் புனிதமானது தான். கடமையில் பக்தியுடன் இருப்பது தெய்வ வழிபாட்டில் மிக உயர்ந்த முறையாகும்.
- நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, பிறர் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கு உதவி செய்வதே.
- இன்னல்கள் அனைத்துக்கும் நடுவிலும், நமது தெய்வத்தன்மையை இழக்காமல் இருக்க வேண்டும்.
- கோயிலாலோ, விக்ரகத்தின் அழகாலோ இறைவன் மகிமை பெற்றான் என்பதில்லை. கடவுளால் தான் அவற்றுக்குப் பெருமை.
- பணத்திற்காக, உடல்நலத்திற்காக, சொர்க்கத்திற்காக, ஞானத்திற்காக அல்லாமல் மன சுத்தத்துக்காக பிரார்த்தனை செய்யுங்கள். பிற பிரார்த்தனைகள் அனைத்தும் சுயநலம் தான்.

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**



அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மரதன் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. (படங்கள் – மகாலிங்கம்)

# இறுதிப் போட்டிக்கு தெரிவானது இளங்கதிர்





றெயின்போ விளையாட்டுக்கழகம் தனது பவள விழாவினை முன்னிட்டு வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே நடத்தி வந்த கரப்பந்தாட்ட போட்டியின் அரையிறுதியாட்டத்தில் ரேவடி அணியினை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் 25:21, 25:10 என்ற செற் கணக்கில் இளங்கதிர் அணியானது வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இளங்கதிர் அணியைச்சேர்ந்த சுகுணராஜ் தெரிவு செய்யப்பட்டார். (7)

# இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றது யங்ஹென்றிஸ்

சென்.நீக்கிலஸ் அணியினர் கிடைத்த வாய்ப்புக்களைத் தவறவிட அதனைச் சாதகமாக்கி ஆட்டத்தில் வேகத்தை அதிகரித்து, அடுத்தடுத்து கோல்களைப் பொழிந்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி சம்பியனாகியது.

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தியது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 32 அணிகள் பங்குபற்றின. அணிகள் ஏ,பி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம்பெற்றன. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 4 அணிகள் வீதம், 8 அணிகள் சுப்பர் - 8 லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

ஏ பிரிவில் இருந்து குருநகர் பாடும்மீன், திக்கம் இளைஞர்கள், மயிலங்காடு ஞானமுருகன் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் அணிகளும், பி பிரிவில் இருந்து





நாவாந்துறை சென்.நீக்கிலஸ், ஊரெழு றோயல், பலாலி விண்மீன் மற்றும் துறையூர் ஐயனார் ஆகிய அணிகள் தகுதி பெற்றன.



இந்த 8 அணிகளுக்கிடையில் சுப்பர் - 8 ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெற்றன. இதிலிருந்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ், மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை யங்ஹென்றிஸ் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

அரையிறுதியில் யங்ஹென்றிஸ் அணி ஊரெழு றோயல் அணியையும், சென். நீக்கிலஸ் அணி, ஞானமுருகன் அணியையும் வென்றன.

இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

போட்டி ஆரம்பித்தது முதல் யங்ஹென்றிஸ் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் மேலோங்கியது. அவ்வணியின் நட்சத்திர வீரர் அல்பிரட் தனேஸ் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். அதுவரையில் அமைதி காத்திருந்த சென். நீக்கிலஸ் அணியினர் அதன் பின்னர் தமது வேகத்தை சற்று அதிகரித்தனர்.

சென்.நீக்கிலஸ் அணியின் விக்னேஸ் ஆதவ் கோல் ஒன்றை அடித்து போட்டியை சமநிலைக்கு கொண்டு வந்தார். எனினும் அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை. தனேஸ் மீண்டும் ஒரு கோலை அடித்து யங்ஹென்றிஸை முன்னிலைப்படுத்தினார். முதற் பாதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் அணி. 2:1 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பித்ததும், சென். நீக்கிலஸ் அணிக்கு அருமையான பெனால்ட்டி வாய்ப்பொன்று கிடைத்தது. யங்ஹென்றிஸ் அணியின் கோல் காப்பாளர் அமல்ராஜின் அருமையான தடுப்பால் அதனை சென்.நீக்கிலஸ் அணியினால் கோலாக்க முடியவில்லை. மீண்டும் ஒரு இலகுவான கோல் அடிக்கும் வாய்ப்பு சென்.நீக்கிலஸ் அணிக்கு கிடைத்தும், அதனையும் அவ்வணியினர் வீணாக்கினர்.

ஆட்டத்தில் போக்கு மாறுவதை உணர்ந்த யங்ஹென்றிஸ் அணியினர், வியூகத்தை மாற்றி தமது ஆட்டத்தில் வேகத்தைக் கூட்டினர். அவ்வணியின் தேசிய நட்சத்திர வீரர் செபமாலை நாயகம் ஞானரூபன் கோல் ஒன்றை அடித்தார்.


அந்த சூடு அடங்குவதற்குள் யங்ஹென்றிஸ் அணியின் அன்ரனி டிலக்ஸன் மேலுமொரு கோலை அடித்து யங்ஹென்றிஸ் அணியினர் வெற்றியை உறுதி செய்தார்.

எனினும், அதன் பின்னர் எவரும் எதிர்பாராத வகையில் சென்.நீக்கிலஸ் அணி வேகமெடுத்தது. சென். நீக்கிலஸ் அணியின் வி.றதீஸ், எம்.றொக்ஸன் அடுத்தடுத்து கோல்களை அடித்து ஆட்டத்தில் விறுவிறுப்பை ஏற்றினர். எனினும், ஆட்டத்தின் நேரம்முடிவடைய, வெற்றியை யங்ஹென்றிஸ் அணி, 04:03 என்ற கோல்கள் கணக்கில் தனதாக்கியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக ஊரெழு றோயல் அணியின் தர்மகுலநாதன் கஜகோபனும், இறுதிப் போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடரில் அதிக கோல்கள் (12 கோல்கள்) அடித்த வீராக யங்ஹென்றிஸ் அணியின் அல்பிரட் தனேஸ் மற்றும் சிறந்த விக்கெட் காப்பாளராக யங்ஹென்றிஸ் அணியின் அமல்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (7-26)




# மேற்கிந்தியதீவை துவம்சம் செய்து வாகை சூடியது ஆப்கான் அணி



உலகக்கோப்பை தகுதிச் சுற்று தொடரின் இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறும் 50 ஓவர் உலகக்கோப்பை தொடருக்கான தகுதிச் சுற்றுத் தொடர் சிம்பாவேயில் நடைபெற்றது.

லீக் மற்றும் சுப்பர் சிக்ஸ் சுற்றுகள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் உலகக்கோப்பை தொடருக்கு தகுதி பெற்றன.

முதல் இரண்டு இடங்களும் பிடித்த இந்த அணிகள் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் சம்பியன் பட்டத்திற்காக பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதிரடி மன்னர்கள் கிறிஸ் ஹெய்ல், லெவிஸ் முறையே 10, 27 ஓட்டங்களிலும், ஷாய் ஹோப் 23 ஓட்டங்களிலும், அனுபவ மிடில் ஆர்டர் வீரர் சாமுவேல்ஸ்17 ஓட்டங்களிலும் வெளியே, ஆர்.பொவேல் தாக்குப்பிடித்து 44 ஓட்டங்கள் அடிக்க மேற்கிந்தியத் தீவுகள் 46.5 ஓவரில் 204 ஓட்டங்களில் சுருண்டது. ஆப்கானிஸ்தான் சார்பில் முஜீத் உர் ரஹ்மான் 4 விக்கெட் வீழ்த்தினார்.



பின்னர் 205 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் களம் இறங்கியது.

மொகமது ஷேசாத், குல்பாதின் நைப் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

குல்பாதின் நைப் 14 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து மொகமது ஷேசாத் உடன் ரஹ்மத் ஷா ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ரஹ்மத் ஷா 78 பந்தில் 51 ஓட்டங்களும், மொகமது ஷேசாத் 93 பந்தில் 11 பவுண்டரி, 2 சிக்சர்களுடன் 84 ஓட்டங்கள் குவித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

அடுத்து வந்த மொகமது நபி 12 பந்தில் 27 ஓட்டங்கள் அடிக்க, 40.4 பந்தில் 3 விக்கெட் இழப்பிற்கு 206 ஓட்டங்கள் எடுத்து ஆப்கானிஸ்தான் 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (7)

## சாவகச்சேரி நகர...

மங்கை, உப தலைவராக அருணா சலம் பாலமயூரன் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபைக்கான புதிய தலைவரை தெரிவு செய்யும் அமர்வு வட மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நேற்று மாலை சாவகச்சேரி நகரசபா மன்றத்தில் நடைபெற்றது.

18 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச் சேரி நகரசபையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 6 உறுப்பினர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 5 உறுப்பினர்க ளையும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர் 3 உறுப்பினர்களையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 2 உறுப்பினர்களையும் ஐக்கிய தேசி யக்கட்சி மற்றும் சுயேட்சைக்குழு ஆகியன தலா ஒரு உறுப்பினர்களையும் பெற்றுள்ள னர்.

புதிய தலைவரை தெரிவுசெய்வதற்கான அமர்வில் அகில இலங்கை தமிழ்க் காங்கி ரஸினர் யோ.ஜெயக்குமாரை தலைவராக பிரேரித்ததுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் இராமநாதன் சிவமங்கை என்பவரை தமது கட்சி சார்பில் பிரேரித்தனர் பெரும்பா ன்மை உறுப்பினர்கள் பகிரங்க வாக்களி ப்பை கோரியதன் அடிப்படையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில், 12 வாக்குகளை பெற்று சாவ கச்சேரி நகரசபையின் முதல் பெண் தலைவ ராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இராமநாதன் சிவமங்கை தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் சாவகச்சேரி நகரசபையின் உப தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பின் சார்பில் அருணாசலம் பாலமயூரன் பிரே ரிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். (ம-9-29)

## ஐ.தே.கட்சி ஆதரா...

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட் சியை கைப்பற்றுவதற்கான பலப்பரீட்சையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

யாழ் மாநகர சபை முதல்வராக தமிழ் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த இம்மானு வேல் ஆர்னோல்ட், பிரதி மேயராக துரைராசா ஈசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாநகர சபை உறு ப்பினர்களுக்கான முதலாவது அமர்வு வட க்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நேற்று திங் கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாநகரசபைக்கு வட்டார அடிப் படையில் 27 உறுப்பினர்களும், விகிதாசார அடிப்படையில் 18 உறுப்பினர்களும் 6 கட் சிகளில் இருந்து தெரிவாகியுள்ள நிலையில், நேற்றைய அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் சார்பில் 16 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் 13 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயக கட்சி சார்பில் 10 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 3 உறுப்பினர்க ளும், சிறிலங்கா சுதந்திர கட்சி சார்பில் 2 உறுப்பினர்களுமாக 44 உறுப்பினர்கள் சமு கமளித்திருந்தனர். தமிழர் விடுதலை கூட் டணி சார்பில் தெரிவாகிய சுதர்சிங் விஜயகா ந் என்பவர் நீதிமன்றால் குற்றவாளியாக தீர் ப்பளிக்கப்பட்டு சிறை சென்றுள்ளதால் அவர் சமுகமளிக்கவில்லை.

44 உறுப்பினர்களுடன் ஆரம்பமாகிய சபையின் முதல் நிகழ்வாக மாநகர சபை முதல் வர் மற்றும் பிரதி முதல்வர் தெரிவு இடம்பெற்றது.

மாநகரசபை முதல்வருக்கான தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இமானுவல் ஆர்னோல்ட், தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் சார்பில் விஸ்வலிங்கம் மணிவண்ணன், ஈழமக்கள் ஜனநாயக கட்சி சார்பில் முடியப்பு ரெமீடியஸ் ஆகியோ ரின் பெயர்கள் அந்தந்த கட்சியால் முன்மொ ழியப்பட்டன. வேட்பாளர் தேர்தலுக்கு முன் னராக, இரகசிய வாக்கெடுப்பா? பகிரங்க வாக் கெடுப்பா? என தெரிவு முறையைத் தெரிவு செய்வதற்கு ஆணையாளர் அனைத்து உறு ப்பினர்களிடமும் நேரடியாக கோரியிருந்தார்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினாறு உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் மூன்று உறுப்பினர்கள் உள்ளிட்ட 19 உறுப்பினர்கள் பகிரங்க வாக் கெடுப்பையும் ஏனைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 25 உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பையும் கோரியிருந்தனர்.

25 உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடு ப்பை கோரியதன் அடிப்படையில், முதல்வர் வேட்பாளர்களான மூவருக்கும் இடையில் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பின் போது, இ.ஆர்னோல்ட் 18 வாக்குகளையும், மணி வண்ணன், ரெமீடியஸ் ஆகியோர் தலா 13 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

இரண்டு பேர் சம வாக்குகளைப் பெற்றுக் கொண்டதனால், 13 வாக்குகளையும் பெற் றுக் கொண்ட இருவரது பெயர்களும் குலுக் கல் முறைக்கு விடப்பட்டு, மணிவண்ணன் தெரிவிலிருந்து விலக்கப்பட்டார்.

அதன்பின் அடுத்த கட்ட வாக்கெடுப்புக்கு முன்னர் தங்களுக்குக் கலந்துரையாட நேர அவகாசம் வழங்கப்பட வேண்டும் என 23 அங்கத்தவர்கள் கையுயர்த்தி கோரியதன் அடிப்படையில் 10 நிமிட இடைவெளியின் பின்னர் மறுவாக்குப் பதிவு ஆரம்பமாகியது.

மறுவாக்குப்பதிவுக்கான வாக்குச் சீட்டு க்கள் விநியோகிக்கப்படவிருந்த வேளை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டி யிட்ட மு.ரெமீடியஸ் தெரிவிலிருந்து விலகுவ தாக அறிவித்தார். அதன் பின் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட இம் மானுவல் ஆர்னோல்ட் யாழ். மாநகர முதல் வராக ஆணையாளரால் அறிவிக்கப்பட்டார்.

அதன் பின் யாழ். மாநகர முதல்வர் இ. ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்ற பிரதி முதல்வர் தெரிவில் வேறு கட்சிகள் பிரதி மேயர் பதவிக்கு போட்டியிடாத நிலை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்ட துரைராசா ஈசன் பிரதி மேய ராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் குறி த்த முதல் அமர்வு நிறைவடைந்தது. (ம-9)

## கட்சி பேதங்களு...

ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலை மையில் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த அமர்வின் பின்னர், அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் அளித்த ஜனநாயக வாக்குரி மையை மதித்து உறுப்பினர்கள் அனைவ ரும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்துள் ளார்கள். யாழ் மாநகரை புதிய நகரமாக மாற்ற வேண்டும் என்ற உயரிய எண்ண த்தின் அடிப்படையில் என்னை தேர்ந்தெடுத் துள்ளார்கள்.

எந்தவித இடையூறும் இல்லாமல் உதவி மேயர் தெரிவுசெய்யப்பட்டார். ஒரு கட்சி பேத ங்களுக்கு அப்பால் இந்த மாநகர சபையில் அனைத்து உறுப்பினர்களும் மக்களின் நல னுக்காக ஒற்றுமையாக சேர்ந்து பயணிக்க வேண்டும் என்பது தான் எனது விருப்பம். எனது தலைமைத்துவமும் அது சார்ந்ததா கவே அமையும். மக்களின் நலன் சார்ந்த விடய ங்களுக்காக ஒற்றுமையாக பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

## மதுபானம் என...

நான்டோ (வயது63) என்ற மீனவரே மேற் படி உயிரிழந்தவராவார்.

நீர்கொழும்பில் இருந்து முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதிக்கு கடந்த 21 ஆம் திகதி 10க்கும் மேற்பட்ட மீனவர்கள் வந்துள்ளார்கள்.

அவர்களில் சிலர் கடலில் மீன்பிடிப்பதற்கு சென்றுள்ளனர். சிலர் வாடியை சுத்தம் செய்து கொண்டிருந்துள்ளனர்.

கடலுக்கு மீன்பிடிக்க சென்றவர்கள் திரு ம்பி வரும்போது கடலில் மிதந்து வந்த போத் தல் ஒன்றை கொண்டுவந்துள்ளனர். அதற் குள் இருந்த திரவத்தை மதுபானம் என நினைத்து 7 பேர் அருந்தியுள்ளனர்.

சற்று நேரத்தில் அவர்கள் மயக்க நிலையை உணர்ந்ததுடன் அதில் இருவர் மயங்கிய நிலையில் கொக்குளாய் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மேற்குறித்த நபர் மேலதிக சிகிச்சைக் காக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு கடந்த 23 ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால் குறித்த நபர் சிகிச்சை பலனி ன்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## வோக்கி கருவி...

இந்த கருவி மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸா ருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவி க்கப்படுகின்றது.

2009 ஆண்டு இறுதி யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் இலங்கை இராணுவத் தினருக்கு எதிரான தாக்குதல்களை தொடு த்தபோது குறித்த வோக்கியூடாக பல்வேறு கட்டளைகள் வழங்கியிருக்கலாம் என கரு தப்படுகின்றது. (ம)

## யாழ்.போதனா...

நீதிமன்றில் முற்படுமாறு யாழ்ப்பாணம் நீத வான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

வல்வெட்டித்துறை கரணவாய் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் கடந்த 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத காலப்பகுதியில் பிரசவ த்துக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு இரட் டைக் குழந்தைகள் பிறந்ததாகவும் மகப்பே ற்று நிபுணர்களின் உதவியுடன் தன்னு டைய ஒரு குழந்தை கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அவரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகள் நீண்ட காலம் இடம்பெற்று தற்போது யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகி ன்றது. கடந்த வழக்குத் தவணையின் போது, இந்த வழக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவின ருக்குப் பாரப்படுத்துமாறும் இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற் றுக் கொள்ளுமாறும் நீதவான் கட்டளை பிற ப்பித்திருந்தார்.

எனினும் நேற்றைய தினம் இந்த வழ க்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குற் றப்புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தோன்ற வில்லை. எனவே அடுத்த வழக்குத் தவணை யின் போது குற்றப்புலனாய்வு பிரிவு பணிப்பா ளரை நீதிமன்றில் தோன்றுமாறு நீதவான் எஸ்.சதீஸ்தரன் கட்டளை பிறப்பித்தார். (ம-9)

## பேருந்து விபத்தி...

உயிரிழந்த நபர் ஓடிச் சென்று பேருந்தில் ஏற முயற்சித்த போது தவறி கீழே விழுந் துள்ளார். கீழே விழுந்த நபர் மீது பேருந்தின் பின் பக்க சக்கரங்கள் ஏறியதில் படுகாயம டைந்த நபர், கிளிநொச்சி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரி ழந்துள்ளார்.

கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தை சேர்ந்த 23 வயதான ஜேசுமன் டசிகரன் என்ற இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள் ளார். சடலம் கிளிநொச்சி வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக தனியார் பேருந்து சாரதி கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் கிளி நொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம)

## கடற்படையினரின்...

களின் தந்தையான அடைக்கலம் கொன் சலஸ் (வயது 42) என்பவரே மேற்படி உயிரி ழந்தவராவார்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் தங்கியிருந்து கடற்தொழில் செய்துவரும் குறித்த நபர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு நேற்று இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

சங்குப்பிட்டி- கேரதீவு வீதியில் கடற்படை யினருடைய உழவு இயந்திரத்தில் பொரு த்தப்பட்ட தண்ணீர் தாங்கி ஒன்று எந்தவித சமிஞ்ஞை விளக்குகளும் இன்றி நிறுத்தப்பட் டிருந்துள்ளது.

குறித்த உழவு இயந்திரத்தில் நீண்ட கம்பி ஒன்று பொருத்தப்பட்டிருந்த நிலையில் இந்த நபர் மோட்டார் சைக்கிளில் அப்பகுதிக்கு வந்த போது குறித்த கம்பி முகத்தில் மோதி நிலை தடுமாறிய நிலையில் எதிரே நின்ற உழவு இயந் திரத்தில் மோதுண்டு வீதியில் தூக்கி வீசப்பட்டார்.

அந்த சமயம் யாழ்ப்பாணத்தில் இருந்து அருட்தந்தையர்களை ஏற்றி சென்ற கார் ஒன்று குறித்த நபர் மேல் மோதியது. காரின் சில்லுக்குள் நசியுண்டு சம்பவ இடத்திலேயே குறித்தநபர் உயிரிழந்துள்ளார். குறித்த சம்ப வம் தொடர்பாக பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ம-9)

# அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் அர சின் தீர்மானத்துக்கு எதிராக அனைத்துப் பல் கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பா ட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலைய முன்றலில் நேற்று திங்கட்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன் றியம், மருத்துவ பீட மாணவர் பெற்றோர் ஒன்றியம் மற்றும் மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக்குழு ஆர்ப்பாட்டத்தை இணை ந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திரு ந்தன.

சைட்டம் தனியார் மருத்துவ கல்லூ ரியை ஒழிப்பதாகக் குறிப்பிட்ட அரசு, தனது வாக்குறுதியை மீறி செயற்படுகின்றது. சைட் டத்தை கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலை கழகத்துடன் இணைப்பது அந்தக் கல்லூரி யின் மாணவர்களின் நலனை கருதியில்லை. முதலாளிகளின் வருமானத்தை உயர்த்தி சுதந்திர கல்வி மற்றும் சுகாதாரத்தை தனி யார் மயப்படுத்துவதேயாகும்.

சைட்டம் தனியார் மருத்துவ கல்லூ ரியை கொத்தலாவலை பல்கலைகழகத் துடன் இணைப்பதே அரசின் நோக்கமா னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு தீர்வு கிடைக்கும்வரை மீண்டும் தொடர் போராட் டங்களை முன்னெடுக்க தயாராகவுள்ளோம் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசுக்கு எச்சரித்துள்ளது. (ம)

## வீதியில் போடப்பட்டிருந்த தென்னை...

மன் ஆலயத்தில் திருவிழா நிகழ்வுக்காக நேற்று அதிகாலை 5 மணியளவில் மேற்குறித்த பெண் தனது கணவனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

ஆலயத்துக்கு செல்லும் வழியில் தண்ணீர் பந்தலை அலங்கரிக்கும் வேலையில் சிலர் ஈடுபட்டிருந்துள்ளனர். அப்போது வீதிக்கு குறுக்கே தென்னை ஓலையும் போடப்பட்டிருந்தது.

இவர்கள் தண்ணீர்ப்பந்தல் அருகே வரும் போது எதிரே அதிக வெளிச்சத்துடன் கார் ஒன்று வந்துள்ளது. அப்போது குறித்த பெண்ணின் கணவர் சற்று நிலை தடுமாறியதும் வீதியில் இருந்த தென்னை ஓலையில் சறுக்கி இருவரும் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேற்குறித்த பெண்ணின் தலையில் பாரிய காயம் ஏற்பட்டதுடன் கணவனுக்கும் சிறிது காயம் ஏற்பட்டது.

உடனடியாக அங்கு நின்ற இளைஞர்கள், இருவரையும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக குறித்த பெண் யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். ஆனால் காலை 8.00 மணியளவில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி கே.இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (ம-9)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550*/=Kg
கனடா-1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு:
0768226240
V2 TRAVELS
(C-1982)
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



### பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டத்தினருக்கு பல்வேறுபட்ட 8 பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- Team Supervisor
- Admition
- Ware House and Distribution
- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்புண்டு.
- வயதெல்லை 18 - 35
- 20 பேர் மட்டும்

தொடர்புகளுக்கு : 0766767620
0775566224
(3396)



### இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணம்

இந்திய துணைத் தூதரகமானது தூதரகத்தின் பாவனையிலிருந்த நல்ல நிலையில் உள்ள மகேந்திரா ஸ்கோப்பியோ வகையான சாம்பல் வர்ண. 2010 ஆம் வருட வாகனத்தினை விற்பனை செய்வதற்கான கேள்வி விலை மனுக்கோரல்களை ஆர்வமுள்ளவர்களிடமிருந்து கோருகின்றது.

15 ஏப்ரல் 2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பூர்த்தி செய்த கேள்வி விலை மனுக்கோரல்களை தூதரக முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்கள் மற்றும் வாகனத்தினை பார்வையிடுவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரைத் தொடர்பு கொள்ளவும். (C-1925)

பெயர் :-திரு.வே.ஜோர்ஜ்
தொலைபேசி இலக்கம் 021 222 0504 (09.00–16.00)



கடந்த 2017 ஆம் ஆண்டின் சாதனையுடன்...
A/L 2020 தொழில்நுட்பபிரிவு மாணவர்களை
TECHNO WORLD
வெலிங்டன் சந்தி [லிங்கன் கூல்பார் அருகாமை], யாழ்ப்பாணம்.
அன்புடன் வரவேற்கின்றது
புதிய பிரிவு - A/L 2020
28.03.2018
முதல் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்
வெளிமாவட்ட மாணவர்களுக்காக சனி, ஞாயிறு தினங்களில் விசேட நேர சூசிகள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.
30.03.2018 (வெள்ளிக்கிழமை)
காலை 8.30 வகுப்புக்கள் ஆரம்பம்
எமது கடந்தகால சாதனைகள்
மாவட்ட ரீதியில் முதல் நிலை சாதனையாளர்கள்
பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு - தமிழின்பன் (1) கோகுலன் (3)
Z - புள்ளி 2.9808 - தேசிய நிலை 20 (2A,B)
உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு - கேசனா (1), சரண்சனா (3)
எமது நிறுவனத்தில் கல்வி கற்று 65 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர்.
077 017 5346
(C-2000)


## கட்சி பேதமின்றி...

தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை முற்பகல் பொலநறுவை ரோயல் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது பொறுப்புக்களை மக்களுக்காக உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும். அத்துடன் சிறந்த அரசியல் கலாசாரத்திற்கான ஒழுக்கப் பண்பாடுகளுடன் புதிய உறுப்பினர்கள் செயற்பட வேண்டும்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளில் 40 வீதத்திற்கு அதிகமாக பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைத்த வாக்குகளுடன் ஒப்பிடுகின்ற போது எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உதவியின்றி ஆட்சியமைக்க முடியாது.

இந்த பெறுபேறுகளை அடிப்படையாக கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எதிர்காலத்தில் தெளிவான வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கட்சித் தலைவர் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் உள்ளேன் எனத் தெரிவித்தார்.

தமன்கடுவ நகர சபை, தமன்கடுவ பிரதேச சபை, திம்புலாகலை பிரதேச சபை, வெலிகந்த பிரதேச சபை, ஹிங்குராங்கொடை பிரதேச சபை, லங்காபுர பிரதேசசபை, மெதிரிகிரிய பிரதேச சபை மற்றும் எலஹர பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இதன்போது பதவிப்பிரமாணம் செய்தனர்.

பிரதேச அரசியல் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில், புதிய உறுப்பினர்களுக்கு 'மகாத்மா காந்தி' என்ற நூலும் நெல்சன் மண்டேலாவின் சுயசரிதை தொடர்பான நூலும் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன. (ம)


மோட்டார் சைக்கிள் தேவை!
நல்லநிலையில் உள்ள பாவித்த மோட்டார் சைக்கிள் உடன் தேவை. உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி!
0779086737 (3394)



கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்!
0779086737 - 0764164171
COMPUTER REPAIR GUNA BEST PC
522, Manipay Road, Ottumadam, Jaffna.
(3394)



உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
தேர்முகத்தேர்வு - 31-03-2018 சனிக்கிழமை காலை 10 மணி
49A ... யாழ்ப்பாணம்
0768226241
(C-1987)


## எதிர்வரும் 2ஆம் திகதி ஆராய...

தீர்மானம் தொடர்பில், தமிழ் மக்களின் அபிலாஷைகளை அறிந்து, கூட்டமைப்பு செயற்பட வேண்டும் என மகிந்த அணி கோரிக்கை விடுத்திருந்தது.

ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன இந்த கோரிக்கையை விடுத்தார்.

பிரதமரின் நிர்வாகத்தின் கீழ் கடந்த மூன்று வருடங்களாக வடக்கு கிழக்கில் நிலையான அபிவிருத்திகள் எவையும் இடம்பெறவில்லை.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்தில் கவனம் செலுத்துவதே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக அமையும் எனவும் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மாவை சேனாதிராஜா, தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அறிவுரை சொல்ல மகிந்த அணிக்கு அருகதை இல்லை எனவும் குறிப்பிட்டார். (ம)

## மனித புதை குழியா என...

மண்ணில் இருந்து மனித எலும்புகள் என சந்தேகிக்கப்படும் எலும்புத்துண்டுகள் பல நேற்றுக் காலை மீட்கப்பட்டன.

அவை மனித எலும்புக்கூடுகளா அல்லது மிருகங்களின் எலும்புகளா? என்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் நகர நுழைவாயில் பகுதியில் ஏற்கெனவே இயங்கி வந்த "லங்கா சதொச" விற்பனை நிலையம் அண்மையில் முழுமையாக உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

பழைய கட்டடம் உடைக்கப்பட்டு தோண்டப்பட்டு வரும் மண் மன்னாரில் உள்ள மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் எமிழ் நகர் கிராமத்தைச் சேர்ந்த வீடு ஒன்றுக்கு விற்கப்பட்ட மண்ணில் சந்தேகிக்கப்படும் மனித எலும்புத் துண்டுகள் பல மீட்கப்பட்டுள்ளன என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

எமிழ் நகர் கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் "சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்வு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட ஒரு டிப்பர் மண்ணை பணம் கொடுத்து கடந்த சில தினங்களுக்கு முன் கொள்வனவு செய்துள்ளார்.

அந்த மண் அவரது வீட்டுக்கு வெளியில் கொட்டப்பட்ட நிலையில் மண்ணை அள்ளி வீட்டு வளவினுள் கொண்டியுள்ளார்.

எனினும் மண்ணில் இருந்து சந்தேகத்துக்கிடமான எலும்புத் துண்டுகள் பல வர தொடங்கின. அது குறித்த வீட்டின் உரிமையாளர் சந்தேகம் கொண்டு நேற்று முன் தினம் மாலை மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தார்.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மன்னார் பொலிஸார் அந்த வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா தடவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

மீட்கப்பட்ட எலும்புத்துண்டுகள் மனிதனுடையதா அல்லது மிருகங்களினுடையதா? என்பது தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் நீதிவான் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் அந்தப் பகுதிக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்ளும் வரை சந்தேகத்திற்கிடமான எலும்புகள் மீட்கப்பட்ட இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது. அத்துடன் மன்னார் - மதவாச்சி வீதி உயிலங்குளம் பகுதியிலிருந்தும் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


மாலைதீவு வேலைவாய்ப்பு
ரைல் மேசன், பிளாஸ்டர் மேசன், எலெக்ட்ரீஷியன், பிளம்பர், காபென்ரர், கட்டட தொழிலாளர், கம்பி வேலையாள்
டுபாய் பாதுகாப்பு ஊழியர் (ஆண் / பெண்) Hotel Waiter, Steward, Cooks, Commis
விபரங்களுக்கு 0777 324 004
Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists
SIKARAM ACADEMY Business · Hospitality · Media FAST TRACK to CAREERS
407-2/1, Galle Road Mt.Lavinia
221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11
(C-2002)



Job + Courses = Career Opportunities
பயிற்சி நெறியுடன் கூடிய வேலைவாய்ப்பு

எமது நிறுவனமானது புதிய கிளைகளிற்குரிய கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.

| பதவிகள் | பயிற்சிக்காலம் | தகைமைகள் |
|---|---|---|
| 1. விற்னையாளர் | -------- | Gr- 10, O/L |
| 2. மேற்பார்வையாளர் | 1 மாதம் | O/L, A/L |
| 3. உதவிமுகாமையாளர் | 3 மாதம் | O/L (Pass), A/L |
| 4. அலுவலகர் | 1 மாதம் | A/L (Pass) |
| 5. முகாமையாளர் | 6 மாதம் | A/L (Pass), Diploma |

O/L, A/L முடித்தவர்கள் மட்டுமல்லாது ஏனையவர்கட்கும் அடிப்படை 3 மாதப் பயிற்சியுடன் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும் (E396)

| மாவட்டம் | இடங்கள் |
|---|---|
| கிளிநொச்சி | பரந்தன், கிளிநொச்சி |
| முல்லைத்தீவு | மாங்குளம், புதுக்குடியிருப்பு |
| மன்னார் | பேசாலை, மன்னார் |
| வவுனியா | வவுனியா, செட்டிக்குளம் |
| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
| ஹற்றன் | நுவரேலியா |

தொடர்பு : 077 126 3805, 076 656 4030


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.